பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி 14 | திங்கட்கிழமை | (28.06.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 192




# புதிய அரசியல் கட்சியை பதிவு செய்கிறார் கருணா

## தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பிவைப்பு; கட்சியின் பொதுச் செயலாளராக மாறன் நியமனம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ள கருணா தேர்தல் ஆணையாளரிடம் நேரில் சென்று உத்தியோக பூர்வமாக 'தமிழீழ விடுதலைப் புலிகள் கருணா அணி'(KARUNA WING) என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்றைப் பதிவு செய்யவுள்ளதாக கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய அரசியல் கட்சியை ஸ்தாபிக்கும் நோக்குடன் கருணா கொழும்பில் மூன்று கட்டங்களாகப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். இம் மூன்று கட்டப் பேச்சுக்களில் கட்சியின் மத்திய குழு, பொதுச் செயலாளர் பதவி, நிதிப் பொறுப்பாளர் பதவி போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

கட்சியின் மத்திய குழுவில் ஏழு உறுப்பினர்கள் உள்ளடக்கப்படுகின்றனர். கட்சியின் பொதுச் செயலாளராக மாறனும் நிதி பொறுப்பாளராக குகனேசன் என்பவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். கருணா அணியை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதில் தமிழ் அரசியல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கடற்கரும்புலிகள் நால்வர் படகு விபத்தில் வீரச்சாவு

(கிளிநொச்சி)

கடந்த 27.06.2003 அன்று சர்வதேச கடற்பரப்பில் ஏற்பட்ட படகு விபத்தொன்றின் போது நான்கு கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடற்கரும்புலி லெப்டினன் கேணல் யாழினி (நாகரத்தினம் நிரஞ்சினி- தோப்புக்காடு காரைநகர்), கடற்கரும்புலி லெப்டினன் கேணல் அமுதம் அல்லது ஈழப்பிரியா(பாலசுப்பிரமணியம் சுகந்தினி-பன்னாலை தெல்லிப்பழை) கடற்கரும்புலி மேஜர் கதிர்ஒவியன்(செல்வன் ஞானேஸ்வரன்-புன்னாலைக்கட்டுவன் தெற்கு. யாழ்ப்பாணம்.), கடற்கரும்புலி கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் -புலிகள் சந்திப்பு இடை நிறுத்தம்

# கண்காணிப்புக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனுடன் இன்று சந்திப்பு

(நமது நிருபர்)

**இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்பியுறு ஹெவ்டே இன்று கிளிநொச்சியில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளார்.**

**கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வந்த மாதாந்த இராணுவத்தரப்பினருடனான சந்திப்பினை விடுதலைப் புலிகள் இடைநிறுத்திவைத்துள்ள நிலையில் இன்றைய இப்பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.**

அண்மைக்காலமாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களையடுத்து அங்குள்ள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சஉணர்வுகளையும் இராணுவத்தினருக்கும் கிழக்கு மாகாண விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளையும் போக்கும் வகையில் இன்றைய சந்திப்பு இடம் பெறவுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இன்று காலை 11 மணிக்கு இச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிராந்தியத் தளபதிகளுக்கும் இராணுவத் தரப்பினருக்குமிடையே மாதாந்தம் இடம் பெற்று வரும் 'பிரச்சினைக்குத் தீர்வு' காணும் கலந்துரையாடல்களில் எடுக்கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவுக்கு இராணுவம் பாதுகாப்பா? மறுக்கிறார் தளபதி லயனல் பலகல்ல

(லண்டன்)

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலக்கப்பட்ட கருணாவுக்கு இலங்கை இராணுவம் பாதுகாப்பு வழங்கியதாக வெளியான செய்திகளை இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல மறுத்துள்ளார்.

இச் சம்பவத்தில் எந்தவொரு இராணுவ அதிகாரியும் ஈடுபடவில்லை இக் குற்றச்சாட்டு ஆதாரம் அற்றது.

சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ள வேளையில் கிழக்கு மாகாணத்தில் தமது பலத்தைத் தளர்த்த முயற்சிப்பதாக இராணுவத்தினர் மீது புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேரினவாதிகளின் ஏமாற்று வித்தைகளுக்கு பணிந்து போகும் ஏமாளிகள் நாமல்ல

### மாத்தளைக் கூட்டத்தில் ஈழவேந்தன்

(மாத்தளை)

இந்த நாட்டை ஆட்சி செய்து வரும் சிங்கள பேரினவாதத் தலைவர்களால் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான சிறந்தஒரு தீர்வு முன்வைக்கப்படும் என்பதில் எமக்கு எள்ளளவும் நம்பிக்கையில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாத்தளையில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே ஈழவேந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் மீது இருந்த நம்பிக்கை புலிகளுக்கு அறவே போய்விட்டது

### முன்னாள் அமைச்சர் ராஜித

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகள் ஆபத்திற்குள் மாட்டிக் கொண்டுள்ளன.புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தபின் உருப்படியாக எதுவும் நடைபெறவில்லை.சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே அரசின் பிரதான நடவடிக்கையாக இருக்க முடியும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால், அதுகூட ஸ்தம்பித்து நிற்கின்றது. இந்த அரசு புலிகள் இயக்கத்தினுள் பிளவையேற்படுத்துவதில் ஈடுபட்டது. அதனால் கருணா பிரிந்து செல்ல நேரிட்டது. புலிகள் இந்த அரசில் நம்பிக்கை இழந்துவிட்டனர். சமாதான நடவடிக்கைகள் முன்னேறுமென எப்படி எதிர்பார்க்க முடியும் இவ்வாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்தின பேட்டியொன்றில் கூறியிருக்கிறார்.

இடத்திற்கு ஒருவிதமாக கருத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்காக ஐ.ம.சு.மு. அரசைக் கவிழ்ப்போம்

### எதிர்க் கட்சித் தலைவர் ரணில் பகிரங்க உரை

(கொழும்பு)

ஆட்சிப் பீடமேறும் ஆசையில் பொது மக்களுக்கு பல வாக்குறுதிகளை அள்ளிவீசிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம், தற்போது அதனை நிறைவேற்ற முடியாது திண்டாடுவதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் மொனறாகலை மாவட்டத்தில் இருந்து போட்டியிடும் ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர்களை ஆதரித்து அம்மாவட்டத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தேர்தல் விஞ்ஞாபனத்தை மீறியுள்ளமை குறித்து நாட்டு மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக எமது கட்சி உறுப்பினர்கள் வீட்டுக்கு வீடு சென்று



(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்சியைக் கவிழ்க்க ஹெல உறுமய உதவாதாம்

(கொழும்பு)

கூட்டுச் சேர்ந்துள்ள சகல எதிர்க் கட்சிகளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைக் கவிழ்க்கும் செயல்களில் ஈடுபட மாட்டார்களென ஹெல உறுமயத் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் அமர்த்தும் நடவடிக்கையில் நாம் ஈடுபடமாட்டோம். பாராளுமன்றில் ஜனநாயகத்தை ஏற்படுத்தவே ஒன்றிணைந்துள்ளோம். இதனை ஏதாவது ஒரு கட்சியின் அரசியல் இலாபங்களுக்குப் பயன்படுத்தினால் உடனடியாக கூட்டணியில் இருந்து வெளியேறிவிடுவோம்.

ஹெல உறுமய அரசியல் நலனைக் கொண்டிருக்கவில்லை. தேசிய நலனையே நோக்காகக் கொண்டது. பாராளுமன்றில் அநாகரிக நடத்தை காரணமாகவே எமது கூட்டணி ஏற்பட்டது. நடுவு நிலைமைவகிக்கவே நாம் விரும்பினோம். தேசிய நலனில் அர்ப்பணிப்புடன் அரசாங்கம் ஈடுபடுமாயின் நாம் இந்த அரசை நல்வழிப்படுத்துவோம். அரசு மீண்டும் தவறுகளைப் பாராளுமன்றில் ஏற்படுத்த முயலக் கூடாதென்றார். (த-6)

# கருணாவுக்கு உதவியது தானே என்பதை அலிஸாஹீர் அப்போதே என்னிடம் தெரிவித்திருந்தார்


## மனதில் இருந்ததை வெளிக்கொணர்கிறார் மனோ கணேசன்

(கொழும்பு)
கருணா தப்பிச் செல்வதற்கு உதவினார் என்ற விடயத்தைப்



புலிகள் உடனடியாகவே அறிந்திருந்தனர் என மேல் மாகாண முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடாத்திய மனோ கணேசன், புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா விவகாரம் பற்றிய பேச்சு வந்த போது, அந்த சந்தர்ப்பத்திலே கருணாவை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வெளியேற்றியது, கொண்டு சென்றது ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தேசியபட்டியல் பாராளுமன் ற உறுப்பினர் அலி ஸாஹீர் மௌள லானாதான் என்ற ஒரு செய் தியை அன்றே நேரடியாக என் னிடம் தமிழீழ தேசியத் தலை வர் பிரபாகரன் கூறியிருந்தார்.



ஆனால் அது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயம் என்ற காரணத்தினால் நான் அன்றைய காலகட்டத்தில் இதனை ஊடகங்களுக்கு கூறவில்லை.

இன்று அது பகிரங்கப் படுத்தப்பட்டுள்ள காரணத்தினாலேயே சொல்ல வேண்டிய தேவை வந்திருக்கின்றது. ஏனெனில், இது சமீபத்தில் கொழும்பிலிருந்து தப்பிச் சென்று கொக்கட்டிச்சோலையில் பத்திரிகையாளர் மாநாடு நடத்திய நிலாவினி கூறிய பின்னர் தான் இவை பகிரங்கமாக வெளியே வந்திருந்தாலும் கூட என்னைப் பொறுத்த வரையில் கடந்த ஏப்ரல் மாதத்தில் அச்சந்தர்ப்பத்திலேயே புலிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு இவை தெரிந்துதான் இருக்கின்றது.

அச்சந்தர்ப்பத்தில், ஏப்பிரல் 22 ஆம் திகதி என்று நினைக்கின்றேன் பாராளுமன்றத்தில் நண்பர் அலிஸாஹீர் மௌலானாவிடம் நான் இதனைக் கேட்டபோது அப்போதே அவர் அதனை ஒத்துக்கொண்டார். அப்போது அவர் என்னிடம், இது சம்பந்தமான பூரண விளக்கத்தினை புலிகள் தரப்பிற்கு தெரிவிக்க வேண்டும் அதற்கு உதவி செய்வீர்களா என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் உடன்பட்டிருந்தாலும் கூட அதன் பிறகு அவர் அமைதியாகி விட்டார்.

உடனடியாக இது சம்பந்தமான விரிவான விளக்கத்தினை அவர் தந்திருப்பாரேயானால் இத்தகைய நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்காது என நினைக்கின்றேன். அவர் பதவி விலக வேண்டிய சூழ்நிலை கூட ஏற்பட்டிருக்காது என்று நினைக்கின்றேன். என்னைப் பொறுத்த வரையில் புலிகள் மத்தியில் ஏற்பட்டிருந்த அவர்களுடைய உள் விவகாரத்தை தமக்கு சாதமாக பயன்படுத்திக்கொண்டே அவற்றை அடித்தளமாகக் கொண்டு புலிகளைப் பலவீனப் படுத்தலாம் என்றோ, அல்லது தமிழ் மக்களைப் பலவீனப் படுத்தலாம் என்றோ சிங்கள பெருந்தேசிய வாதம் நினைப்பது என்பது எமக்கு ஆச்சரியமான விடயமாக தெரியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி சார்ந்தவர்களும் இதில் சம்பந்தப்பட்டிருக்கலாம் அல்லது சுதந்திரக் கூட்டமைப்பைச் சார்ந்தவர்களும் சம்பந்தப்பட்டிருக்கலாம். என்னைப் பொறுத்த வரை ஒட்டுமொத்தமாக பெருந்தேசியவாத சிந்தனை கொண்டவர்கள் நிச்சயமாக இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு தமிழ் மக்களைப் பலவீனப்படுத்த வேண்டும் என்கிற ரீதியில் இதனை பயன்படுத்தி



இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் குறிப்பிட்ட எந்த நபர் சம்பந்தப்பட்டிருப்பார் என்பதனைப் பொறுத்த வரையில் என்னால் நிச்சயமாக கூற முடியாது. அப்படி தெரியாமல் கூறவும் கூடாது என்றாலும் கூட இத்தகைய செயற்பாடுகளிலே இவர்கள் ஈடுபட்டிருப்பது ஒரு ஆச்சரியமான விடயம் அல்ல என்பதும் எமது நிலைப் பாடாகவும் இருக்கின்றது என்று மேலும் தெரிவித்தார்.

ஏற்கனவே கருணாவிற்கு அலிஸாஹீர் மௌலானா உதவிய செய்தியினை புலிகள் அறிந்திருந்தாலும், புலிகள் இதுவரை இந்த விடயத்தில் காட்டிய பொறுமையும், இராஜதந்திரமும் இன்று கொழும்பில் இரண்டு கட்சிகளையும் சங்கடத்தில் மாட்டிவிட்டுள்ளது என்று பிறிதொரு அரசியல்வாதி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (உ-121)

---

## சிறுவிளம்பரம்

### வட்டுக்கோட்டையில் O/L ஆங்கில வகுப்பு

எதிர்வரும் டிசம்பர் மாதம் O/L பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு தனியாகவும், குழுவாகவும் ஆங்கில வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

பட்டதாரி ஆசிரியரால் நடாத்தப்படும் இவ்வகுப்புக்களின் புதியதொடர் யூலை 1ல் ஆரம்பமாகும். தொடர்புகளுக்கு P.யேசுதாசன் "முருகன் இல்லம்" சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை, தொடர்புகள் மாலை :- 6.00 (C/274)

---

## இயற்கைச்சூழல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(கோப்பாய்)
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி புவியியற் கழகம் நடாத்தும் இயற்கைச்சூழல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று நண்பகல் 1.00மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியற்றுறைத் தலைவர் கலாநிதி. மீனா செந்தில் நந்தனன் இயற்கைச் சூழலைப் பாதுகாத்தலும் மாசடையாது தடுப்பதற்கான நடவடிக்கைகளும் என்னும் விடயம் தொடர்பாக சிறப்புரையாற்றவுள்ளார். (உ-2)

---

## இருநாள் விஜயத்தை முடித்து சிங்கப்பூர் பிரதமர் நாடு திரும்பினார்

சிங்கப்பூர் பிரதமர் கோ.சொக்டொங் இலங்கைக்கு மேற்கொண்ட உத்தியோக பூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று நாடு திரும்பினார்.

2நாள் கொழும்பில் தங்கியிருந்த சிங்கப்பூர் பிரதமரான கோ சொக்டொங், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, மற்றும் எதிர்க்காட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. நீதிஅமைச்சர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை சந்தித்துப் பேசியிருந்தார்.

சிங்கப்பூருக்கும்-இலங்கைக்கும் இடையிலான வர்த்தக பொருளாதார உறவுகளை வளர்ப்பது குறித்து இந்தச் சந்திப்புக்களின் போது விரிவாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப் படுகின்றது. (உ-60,10)

---

## தாதியர், மருந்தாளர்களுக்கு பட்டப்படிப்பு அறிமுகம்

(கொழும்பு)
தாதியர்கள், மருந்தாளர்கள், சுகாதார ஊழியர்கள் ஆகியோருக்கு பட்டப்படிப்பு ஒன்றை அறிமுகப்படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுசரணையுடன் மேற்கெள்ளப்படவுள்ள இப் பட்டப்படிப்பினை உடனடியாக ஆரம்பிப்பதற்கான ஏற்பாட்களை அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

இப் பட்டப்படிப்பை ஆரம்பிப்பதற்குத் தேவையான மதிப்பீட்டு அறிக்கைகளை உடன் சமர்ப்பிக்குமாறு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் சுகாதார அமைச்சு கோரியுள்ளது. (உ-4,61)

---

## பொதுமக்களின் நம்பிக்கையை பொலிஸார் பெற வேண்டும் பொலிஸ்மா அதிபர்

(களுத்துறை)
பொலிஸ் சேவையை திறமைமிக்க தொன்றாக மாற்ற வேண்டுமெமேயானால் பொலிஸாரின் செயற்பாடுகள் குறித்து பொதுமக்களிடையே நம்பகத் தன்மையை ஏற்படுத்த வேண்டும் என பொலிஸ்மா அதிபர் இந்திராடி சில்வூா தெரிவித்துள்ளார்.

இதற்காக பொலிஸ் அதிகாரிகள் மக்களுக்கான தமது சேவையை அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் ஆற்ற வேண்டும் இதன் மூலமே பொலிஸார் மக்களின் நன் மதிப்பை பெற முடியும்.

இவ்வாறு மக்களுக்கான சேவையை தம்மை அர்ப்பணித்து செயலாற்றுவோரின் திறமைகளை ஊக்குவிப்பதற்கு பொலிஸ் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4,64)

---

## பயிர்களை நாசப்படுத்தும் பன்றிகள் உயிர்களுக்கும் சவால் விடுக்கின்றன

### தென்மராட்சியில் இப்படியும் ஒரு அவலம்

(யாழ்ப்பாணம்)
மட்டுவில், கல்வயல், சரசாலை ஆகிய இடங்களில் பன்றிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து வீதி விபத்துக்களும் அதிகரித்துக்காணப்படுகின்றது.

கடந்த வாரம் மட்டுவில் கனகம் புளியடி ஊடாக சாவகச்சேரிக்கு மோட்டார்சயிக்கிளில் சென்றவர்களை பன்றி மோதித் தள்ளியதில் மோட்டார் சயிக்கிளில் பயணித்த கணவனும்-மனைவியும் படுகாயமுற்ற நிலையில், சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கல்வயல் மற்றும் மட்டுவில் பகுதிகளிலும் துவிச்சக்கர வண்டிகளில் பயணம் செய்தவர்கள் பன்றிகளால் மோதப்பட்டு காயமடைந்துள்ளனர்.

மேற்குறித்த இடங்களில் விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்ட பயிர்களை பன்றிகள் நாசம் செய்து வருகின்றன.

இதேவேளை, இரவு வேளைகளில் பன்றிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் பட்டாசுகளைக் கொளுத்தி வருகின்றனர்.

---

## 750 கிராம் போதைப்பொருள் மீட்பு

(புத்தளம்)
புத்தளத்திலுள்ள பள்ளிவாசல் துறையில் வைத்து 750கிராம் எடையுள்ள போதைப்பொருட்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போதே இப் போதைப் பொருட்கள் மீட்கப் பட்டுள்ளன.

இதனை வைத்திருந்தவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-4,64)

## கும்பாபிஷேகம்

(வேரவில)
பொன்னாவெளி, ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலய புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் அலங்கார உற்சவமும் இடம் பெறவுள்ளது. (உ-2)

---

## நியாப் திட்டத்தை அமுலாக்க சுமார் 3 கோடி ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணக் குடாநாட்டில் நியாப்திட்டத்தின் கீழ் கிராமிய மட்டக் குளங்களும் உவர் நீர்த் தடுப்பு அணைகளும் 2 கோடி 90லட்சத்து 40ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இத் திட்டத்தின் கீழ் தென்மராட்சியில் சந்திரன் கிராய் குளத்திற்கு 18லடசத்து 88ஆயிரம் ரூபாவும் நுணாவில் குளத்திற்கு 9 லட்சத்து 99ஆயிரம் ரூபாவும், கொல்லன் கிராய் குளம் புனரமைப்புக்கு 10லட்சத்து 70ஆயிரம் ரூபாவும் கோம்பயன் குளம் புனரமைப்புக்கு 30லட்சம் ரூபாவும்,

கோப்பாயில் உச்சுவில் குளத்துக்கு 5லட்சத்து 11ஆயிரம் ரூபாவும், வாதரவத்தை பெருங் குளத்துக்கு 21லட்சத்து 40ஆயிரம் ரூபாவும், கூனிக்கழிவென் உவர் நீர்த்தடுப்பணைக்கு லட்சத்து 50ஆயிரம் ரூபாவும்,

சங்கானையில் நவியாசுட்ட குளத்துக்கு 13லட்சத்து 20ஆயிரம் ரூபாவும், நெடுந்தீவில் வெட்டிக்கழிக் குளத்துக்கு 46 லட்சத்து 80ஆயிரம் ரூபாவும், ஊர்காவற்றுறையில் மெலிஞ்சி முனைக்குளத்துக்கு 35லட்சத்து 70ஆயிரம் ரூபாவும்,

வேலணை மினியன் வாய்க்காலுக்கு 33லட்சத்து 95ஆயிரம் ரூபாவும் இறுப்பிட்டி நீர் தடுப்பு அணைக்கு 9லட்சத்து 39ஆயிரம் ரூபாவும் கொக்குவில் நந்தாவில் வாய்க்காலுக்கு 33லட்சத்து 99ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 2கோடியே 90லட்சத்து 40ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (உ-16)

---

க.பொ.த.(சா.த) மாணவர்களே!
வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள் வெளிவருகின்றன

# தமிழர் கலாசாரத்திற்கு



இதற்கு ஏ-9 பாதையை குறைகூற வேண்டிய தில்லையே இதற்கு நாம் எல்லோருமே காரணம் என்றுதான் சொல்ல வேண்டும் .இனியும் காலம் கடந்து விடவில்லை . நாம் சிந்தித்து செயலாற்றினால் இந்த அழிவை தடுக்கலாம். இதற்கு ஏ-9 பாதைக்கும் சம்பந்தமில்லை இன்று உலகம் குறுகிக் கொண்டு வருகிறது.இன, மத,மொழி, பிரதேசவாதம்

## விவாதம் -4

எல்லாம் இன்றைய நவீன உலக மயமாக்கல் போக்கில் அடி பட்டு போய்க் கொண்டிருக்கின்றன. இதற்கு பிறகும் நாம் திருந்தாவிட்டால் எங்களை அந்த ஆண்டவனால் கூடகாப்பாற்றமுடியாது. இதற்கு போய் தனியாக ஏ-9 பாதையை குறை சொல்வதில் அர்த்தமில்லை.

## விவாதஅரங்கு - 3

பிறக்கும் பிள் ளைகள் எல்லாம் அங்கு அம்மா, அப்பா சொல்லத் தெரி யாமல் மம்மி, டாடி சொல்லி வளர்கிறார்கள். மொழியை மறந்து தமிழன் என்ற இன அடையாளத்தை இழந்து போய் கொண்டிருக்கிறான். ஒரு நாடா, இருநாடா இப்படி எத்தனையோ நாடுகள் இதற்கெல்லாம் யார் காரணம்? ஏ-9 பாதையா? இப்படியே ஒரு முடிவு இல்லாமல் தொடர்ந்து கொண்டு போனால் முடிவு தான் என்ன?

வருங்காலத்தை நினைக்கவே பயமாக இருக்கி றது கடைசியில் பீ.ஜீ தீவில் இந்தியர்களுக்கு ஏற் பட்டிருக்கும் நிலைமைதான் எங்களுக்கும் ஏற்படப் போகிறது. இதையாரும் சிந்தித்தார்களா? ஏ-9 பாதை யாம் பாதை பூனைக்கு மணி கட்டுவது யார் என்பது தான் இன்று உள்ள பிரச்சினையே தவிர ஏ-9 பாதை

# அழிவினைத் தரும் ஏ-9 பாதை

**ஏ~9 பாதை தமிழர் கலாசாரத்திற்கு விடிவினைத் தருமா? அல்லது அழிவினைத் தருமா? என்ற விவாத அரங்கிற்கு வி.ஆர்.லிங்கம் விடிவினைத் தான் தருகிறது என்று தன் வாதத்தினை முன்வைக்கிறார்.**

ஏ-9 பாதை திறந்ததால் எமது பண்பாடு கலாசாரம் அழிந்து போகின்றது என்று சொல்வது பைத்தியக் காரத் தனம் .ஏ-9 பாதை சண்டை தொடங்குவதற்கு முன்னரும் திறந்து தான் இருந்தது. அப்படி இருந்தும் அன்று எம் முடைய பண்பாடு கலாசாரம் கொடிகட்டிப் பறந்து கொண்டு தான் இருந்தது. இதையாராலும் மறுக்கமுடியுமா? அன்று இந்தப் பாதையால் எவ்வித தடைகளும், ஆனையிறவைத் தவிர இருக்கவில்லை. மக்கள் சுலபமாக தாங்கள் நினைத்த இடத்திற்கு நினைத்தவுடன் போய் வந்தார்கள் இன்று அப்படியா? யார் இதை எல்லாம் செய்கிறார்கள் எல்லாப் பிரச்சினைகளும் சண்டை தொடங்கிய பின்னர் தான் ஏற்பட்டது. மக்கள் அகதிகளாக வெளிநாடுகளுக்கு போனார்கள் எங்கள் பண்பாடு, கலாசாரம் மொழியை மறந்து பலஆண்டுகளாக அங்கு வாழத்தொடங்கினார் கள் இன்று 20 வருடங்களுக்கு பின்னர் சமாதானம் ஏற்பட்ட பிறகு தங்கள் உறவினர்கள் பிறந்த ஊரை பார்ப்பதற்காக ஆவலுடன் குடும்பமாக வருகிறார்கள். இவர்களோ இந் நாட்டில் ஏற்பட்ட போரால் அந்நிய தேசத்தவர்களாக மாறினார் கள். இதன் தாக்கம் ஏ-9பாதை திறந்ததால் ஏற் பட்டு இருக்கிறது. யார் செய்த பிழை ? தனியாக ஏ-9 பாதையை குறை சொல்லி பிரயோசன மில்லை.இன்று எங்கள் நிலை சந்தி சிரிக்க கூடிய அளவுக்கு - உலகம் சிரிக்கும் அளவுக்கு வந்து இருக்கிறதென்றால்

அன்று எம் யாழ்ப்பாண மக்களிடம் நவீன கை அடக்க தொலை பேசிகள், ரீ.வி,கம்பியூட்டர் போன்ற நவீன சாதனங்கள் எல்லோரிடத்திலும் இருக்க வில்லை இன்று எங்கும் இவை இருக்கின்றன. இவை எல்லாம் இருக்க தனிய ஏ-9 பாதையை மூடுவதால் என்னபயன்? எங்கள் பிள்ளைகளை நாம் தொடர்ந்தும் வெளிநாடு களுக்கு அனுப்புகிறோம் குடும்பம் -குடும்பமாக குடி

> **ஏ-9 பாதையை மூடப் போய்த் தான் கடல் போக்குவரத்து ஆரம்பித் தது. எங்கள் பண்பாடு, கலாசாரம் எல்லாம் வெளிப்படையாக ஒன்றோடு ஒன்று முட்டி மோதி, விழுந்து எழும்பி, கட்டிப் பிடித்து தூக்கப்போய்த்தான் எங்கள் பண்பாடு கலாசாரம் எல்லாம் அழிந்தன. கிழவியை குமரன் தூக்கப் போய், குமரியை கிழவன் தூக்கப் போய் தான் கலாசாரச் சீரழிவு யாழ்ப்பாணத் தில் தொடங்கியது.**

பெயர்கிறோம் வெளிநாடுகளுக்கு எங்கள் பெண்பிள் ளைகளை வெளிநாட்டு மாப்பிள்ளை என்றவுடன் கல்யா ணம் கட்டிவைக்கிறோம். இவர்களுக்கு அல்ல சிலர் சொன்னால். கேட்பார்கள் சிலர் கேட்க மாட்டார்கள். கெடுகிறேன் பந்தயம் பிடி என்றால் யார் தான் என்ன செய்ய முடியும். தாங்களும் செய்ய மாட் டார்கள், மற்றவர்களையும் செய்ய விடமாட்டார்கள்.

எல்லோரும் ஊருக்கு உப தேசம் செய்கிறார்களே யொழிய தங்கள் அளவில் தொடர்ந்தும் பிழை விட் டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். சுருக்கமாகச் சொன்

**வீ.ஆர். லிங்கம்**
**இணுவில் கிழக்கு**

னால் அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழிதான். யார் அரசன்? இதற்கு போய் ஏ-9 பாதையை குறை சொல்ல முடியுமா? மேம் பாலங்கள் அமைக்கப் பட்டு வரும் இன்றைய நிலையில் ஏ-9 பாதையை மூடவேண்டும் என்று யாரும் சொல்வானா? எல்லாம் அறியாமை. ஏ-9 பாதையால் அழிவு என்கிற கிணற்றுத் தவளைகள் இருக் கும் மட்டும் எங்களுக்கு விமோர்சனம் கிடையவே கிடை யாது.ஏ-9 பாதையில் கைவைக்கப்போய்தான் எல் லாப் பிரச்சினைகளும் உருவாகின. இடையில் பல வருடங் கள் ஏ-9 பாதையை மூடப்போய் கடல்போக்குவரத்து ஆரம்பித்தது.

எங்கள் பண்பாடு, கலாசாரம் எல்லாம் வெளிப் படையாக ஒன்றோடு ஒன்று முட்டி மோதி விழுந்து எழும்பி கட்டிப் பிடித்து தூக்கப்போய்த்தான் எங்கள் பண்பாடு கலாசாரம் எல்லாம் அழிந்தன. கிழவியை குமரன் தூக்கப்போய், குமரியை கிழவன் தூக்கப் போய் தான் கலாசாரச் சீரழிவு யாழ்ப்பாணத்தில் தொடங் கியது. வெக்கக்கேடு கடைசியில் 'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி' என்ற நிலை தான் எங் கள் நிலை. எனவே ஏ-9பாதையால் தமிழர் கலாசாரத் திற்கு ஒருபோதும் அழிவில்லை, என்றும் விடிவே தான். ★

# நல்ல உலகத்தினை உருவாக்க மனித மேம்பாட்டு எண்ணம் அவசியம்

**உலகப்புகழ்பெற்ற விஞ்ஞானியும் தாய்லாந்தின் முன்னாள் அமைச்சருமான டாக்டர் ஆட் ஓங் யும் சாய் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்ட மனிதமேம்பாட்டுக் கல்வி தொடர்பான கூட்டதில் ஆற்றிய உரையின் தொகுப்பு. பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா சேவை நிலையங்களின் வடபிராந்திய இணைப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வு இலங்கைக்கான மொறிசியஸ் நாட்டின் கொன்சிலேற் ஜெனரல் பிரதிநிதியான வீ.ரீ.டி. ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்றது .**

உலகத்தில் மனிதமேம்பாட்டுக் கல்வியை இன்று 85க்கு மேற்பட்ட நாடுகள் அமுல் செய்து வருகின்றன .இதன் மூலம் புதிய நல்ல சிந்தனைகள், செயல்கள் ஏற்பட்டு வருகின்றன. மனிதமேம்பாட்டுக் கல்விக்கென நாம் புதிய பாடத்திட்ட மாதிரியினை வடிவமைத்துள்ளோம்.தாய் லாந்தில் உள்ள சத்திய சாயிபாபா பல்கலைக்கழகத்தில் இக் கல்வி மிகவும் உயர்வான நிலையில் அமுல் செய்யப் பட்டு வருகிறது. நமது சிறுவர்கள் மத்தியில் நாம் முன்மாதிரியானவர்களாக செயற்படவேண்டும். நல்ல அன்பையும், பழக்கவழக்கங்களையும் போதிக்க வேண்டும். உலகில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு சிறுவர்களுடன் நாம் பணி செய்ய வேண்டியது அவசியம்.

மனிதமேம்பாட்டுக் கல்வியில் ஆசிரியர்கள், கல்வியா ளர்கள்,பெற்றோர்கள் வர்த்தகர்கள் ,சமூக நலன் பேணு வோர் என பலதரப்பட்டவர்களும் பங்குகொள்ளவேண்டும்.

### மனமே முக்கியம்

மனித மேம்பாட்டுக் கல்வியின் அடிப்படை நோக்கம் பற்றிய தெளிவு எமக்கு முதலில் இருக்கவேண்டும். மனி தர்கள் மூளையினால் மட்டுமே எதையும் சாதித்து விட லாம் என சிந்திப்பது தவறானது.ஆனால் மனிதனுக்கு மனமே மிக முக்கியமாகும் . அதிலும் ஊன்ணுணர்வுக்குக் கூடுதல் பங்கு உண்டு.

உலகிலுள்ள சிறுவர்களுக்கும் பல பிரச்சினைகள் இருக் கின்றன. சிறுவர்களுக்கு எது நல்லது எது தவறானது என்பதை நாம் புரிந்து கொண்டு செயறட்பட வேண்டும். மனித மேம்பாட்டுச் சிந்தனை,செயல், எண்ணம் அற்றவை யாதுமே அதன் இலக்கினை இலகுவில் அடையமாட்டாது.

உலகம்பூராகவும் கெட்டித்தனமானவர்கள் இருக்கின்ற போதிலும் கூட அவர்களால் நல்லதோர் உலகத்தினை உருவாக்கிக் கொள்ளமுடியாது. நல்ல சிந்தனைகளும், மனித மேம்பாட்டு எண்ணங்களும் உடையவர்களால் மட்டுமே நல்லதோர் உலகத்தினை உருவாக்க முடியும் .மனித மேம் பாட்டு எண்ணங்களை இதயத்தில் கொண்டவர்களை நாம் உருவாக்க வேண்டும்.

### பிரச்சினைகளுக்கு யார் காரணம்

உலகில் கெட்டித்தனமானவர்களாலும், சுயநலமிக்கவர் களாலுமே ஏராளமான பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின் றன. கெட்டித்தனங்களால் மட்டும் நல்ல உலகத்தினையும் நீதியான சமுதாயத்தையும் உருவாக்கிவிட முடியாது. எனவே மனித மேம்பாடுகளையுடையவர்களை நாம் உருவாக்க வேண் டும். அன்பும் சரியான நடத்தையும் கொண்டவர்களை நாம் உருவாக்க வேண்டியது முக்கியமாகும் .ஆசிரியர்கள் ,கல் வியாளர்கள் சிறுவர்களுக்கு தமது சொல் -செயல்கள் மூலம் உதாரணமாக விளங்கவேண்டும். புகைத்தல் கூடாத பழக்கம் எனக் கூறிக் கொண்டு ஆசிரியர்களும், கல்வியாளர்களும் புகைத்தால் எப்படி அது முன் மாதிரியான செயலாகும். எனவே ஆசிரியர்களும், கல்வியாளர்களும் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களிலும் உண்மையானவர்களாகவும் ,நேர்மையான வர்களாகவும் இருக்கவேண்டும்.

மனிதமேம்பாட்டுக்கல்வியில் ஆசிரியர்கள் முன் உதார ணமாகவும் முன்னோடியாகவும் இருக்க வேண்டும்.பாட சாலைகளில் கட்சி அரசியலுக்கு இடமளிக்கக்கூடாது. இந்தக் கட்சி ,அந்தக் கட்சி என்ற குழப்பங்களை உரு வாக்கக்கூடாது .அரசியலினால் கல்வி பாழடைய இடம் கொடுக்கக்கூடாது.

### உண்மையான அன்பு

மனிதமேம்பாட்டுக் கல்வி மூலம்தான் நாம் உண்மை யான அன்பையும், சமாதானத்தையும் நடைமுறையில் ஏற்படுத்திக் கொள்ள முடியும்.எனவே மனித மேம்பாட்டுக் கல்வியை எமது சிறுவர்கள் மத்தியில் பரப்புவதற்கும், புகட்டுவதற்கும் எம்மை அர்ப்பணித்து பணியாற்ற வேண் டும்.அத்துடன் சிறுவர்களை கூடாத தொலைக்காட்சி நிகழ்ச் சிகளையும்,இணையத்தளங்களையும் வன்முறைகளை ஊக்கு விக்கும் ஊடகங்களையும் பார்ப்பதைத் தடுக்கவேண்டும் . சிறுவர்களுக்கான நல்ல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் இணையத்தளயங்களையும் ஏற்படுத்தும் படி அரசாங்கத் திடம் கோர வேண்டும்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பிரபல பிளாஸ்ரிக் சத்தி ரசிகிச்சை நிபுணரான டாக்டர் பால் டால் அங்கு உரையாற்றும் போது, கல்வி என்பது காலத்தின் தேவை கருதியதாக இருக்க வேண்டும்.மனித விழுமியங்களை வற்புறுத்தாத, பேணாத கல் வியினால் எத்தகைய பயனும் இல்லை. இன்று வன்முறைக் கலாசாரத்தில் ஆசாட பூவதித்தனக் கலாசாரத்துக்கும் சுரண் டல் தன்மைக் கலாசாரத்துக்கும் மத்தியில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.இதனால் எம்மால் எப்படி நல்ல சமுதாயத்தினை உருவாக் கிவிடமுடியும் .கடந்த 10 வருடங் களாக எதிர் மறையான உளவியல் சிந்தனையே மேம்பட்டுள் ளது.இன்று எமக்கு நல்நோக்கான உளவியல் சிந்தனையே தேவையாகவுள்ளது.மனிதமேம்பாட்டுக் கல்வியையும் சிந்தனைகளையும் புரிந்துகொள்ள வேண்டும்.சிறுவர்களையும் மாணவர்களையும் ஆசிரியர்களையும் பயிற்றுவிக்க வேண்டும்.

மனித விழுமியங்களை நாம் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் .அதன் மூலம் தான் சமூக நீதியையும் நேர்மையையும் விளங்கச் செய்ய முடியும் என்றார். இக் கூட்டத்தில் பாங் கொங்கில் உள்ள சாயி பல்கலைக்கழகத்தின் விரிவுரை யாளர் திருமதி லொறென்பறோசும் உரையாற்றினார்.(உ)

# போக்குவரத்தும் வீதிவிபத்துக்களும்

க.கனகராசா
பயிற்சிப் பாடசாலை வடபிராந்திய
கோக்குவரத்துச் சபை

**போ**க்குவரத்து "நாட்டின் முதுகெலும்பு" என்பர். ஆதி மனிதன் ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குக் கால்களால் நடந்து சென்றான். பின்னர் மிருகங்கள் மீதும், பின் வண்டில்களை உருவாக்கி மிருகங்களை இழுக்கச் செய்தான். கைத்தொழில் புரட்சிகளின் விளைவால் இன்று மோட்டார் வாகனங்கள், கப்பல்கள், ஆகாய விமானங்கள், ராக்கெட் எனப் பயணத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இருந்தும் பாதசாரிகளாகத் தமது அன்றாடக் கடமைகளைச் செய்வது தவிர்க்க முடியாத ஒன்றே.

செவ்வாய்க் கிரகத்திற்குப் பயணஞ்செய்யப் பணம் செலுத்திப் பதிவு செய்யும் காலம் இது. இன்றைய உலக வர்த்தகச் செயற்பாடுகளை செயற்படச்செய்வது போக்குவரத்தே. கணனி மூலம் வதிவிடத்தில் இருந்துகொண்டு இன்ரநெற்றில் விளம்பரதாரரிடம் பொருட்களைப் பெறும் வாய்ப்புக்கள் கிடைத்த பின்னரும் வீதிகளில் விபத்துக்கள் அதிகரித்து வருவது தவிர்க்கப்படவேண்டியதே. இயற்கையின் சீற்றத்தினால் போக்குவரத்தின் போது விபத்து ஏற்படுகின்றது. அவை விதி என்பர். மதிமிக்க மனிதர்கள் போக்குவரத்தின் போது ஏற்படும் விபத்தினைத் தாமும் தவிர்த்துக் கொள்வதுடன் மற்றையவர்களுக்கும் இடையூறின்றி நடந்தகொள்வது மதியாகும்.

விபத்து ஏற்படும் காரணங்களை அறிந்து விபத்தினைத் தவிர்த்துக்கொள்வது நல்லது. பாதசாரிகள் சட்டங்களைக் கவனியாது நடப்பதனால் நாமும் விபத்துக்குள்ளாவதுடன் மற்றையவர்களுக்கும் இடையூறாக இருந்து வருகின்றோம். எனவே விபத்து நடைபெறுவதற்கான காரணங்களை அறிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படவேண்டும். இளைய தலைமுறையினர் இவற்றை அறிந்திருத்தல் வேண்டும்.

### சட்டம் அவசியம்

நாட்டுக்குநாடு போக்குவரத்துச் சட்டங்கள் வேறுபடினும் இச் சட்டங்கள் சகலராலும் கடைப்பிடிக்கப்படவேண்டிய ஒன்றாக உணரப்படுகின்றது. பொது விதிகள் இரத்த நாடி, நாளங்கள் போன்று அமைந்திருப்பதால் பாதசாரிகள், வீதியோரங்களில் இதற்கெனப் பாதைகள் அமைக்கப்பட்டிருப்பினும், இல்லாதவிடிலும் ஓரமாகவே செல்லவேண்டும். சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள் சிறுவயதிலிருந்தே இவற்றைக் கடைப்பிடிப்பதற்கு பெரியோர்கள் வழிகாட்டிகளாக இருக்கவேண்டும். இதற்கான திட்டங்கள் காலத்திற்குக் காலம் தேவையான மாற்றங்களுடன் அமுல்செய்யப்பட வேண்டும்.

இலங்கையில் தனியார் பஸ் கம்பனிகள் போக்குவரத்தில் ஆதிக்கம் செலுத்தின. 1958 ஆம் ஆண்டு போக்குவரத்து தேசியமயமாக்கப்பட்டன. 1987.03.13 இல் புதிய வீதி ஒழுங்குச் சட்டமும் 2000 ஆம் ஆண்டில் புதிய தனியார் வாகன உரிமையாளர்கள் சட்டமும் காலத்திற்குக்காலம் நிபுணர்களின் ஆலோசனையும் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

### விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்

வீதியில் விபத்து ஏற்படப் பல காரணங்கள் இருப்பினும் அண்மைக் காலங்களில் விபத்து அதிகரிப்பதற்குப் புதிய புதிய காரணங்களும் இருக்கவே செய்கின்றது. சற்றலைட் உதவியுடன் கையடக்கத் தொலைபேசி பாவனைக்கு வந்ததும் இவற்றைப் பாதசாரிகளும் வாகனச் சாரதிகளும் பயன்படுத்தப்படும் போது தொலைபேசிச் செய்திக்குக் கவனம் ஈர்க்கப்படுமிடத்து அது பாரதூரமான விபத்தினை ஏற்படுத்தும் அளவிற்கு வந்துவிட்டது.

இதே போன்று கவர்ச்சியான விளம்பரங்களை பாதையோரமாக மிக உயரமாக நிறுத்தப்பட்ட இடத்தில் பல விபத்துக்கள் நடந்து கொண்டிருக்கவே செய்கின்றது. மேலும், தற்கொலைக் குண்டுதாரிகள் அனாதரவாக விடப்படும் வாகனங்களில் இருந்து வெடிக்கும் குண்டினால் பாதசாரிகளும், வாகனத்தில் வரும் பயணிகளும் விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

அதிக வேகம், மதுபோதை, வீதிச் சட்டங்களைக் கவனியாது விடுதல், கவனயீனமாக வாகனத்தைச் செலுத்துதல், புகைத்தல், வாகனத்தை ஓட்டும்போது கதைத்தல், முன்செல்லும் வாகனத்திற்குக் கிட்ட ஓடுதல், செருப்பு, வைத்திய ஆலோசனையின்றி கறுப்புக் கண்ணாடி அணிதல், வேறு சிந்தனைகளுடன் வாகனம் செலுத்துதல், வாகனத் தில் இருந்து வெளியே தலையை நீட்டுதல், மிதிபலகையில் பிரயாணம் செய்ய அனுமதித்தல், அறிவித்தலன்றி நிற்பாட்டி எடுத்தல், உடனலம் குன்றிய நிலையில் வாகனம் செலுத்துதல், வாகனத்தில் பழுதுகள் உள்ள போது செலுத்துதல், வீதி அடையாளங்களை அவதானியாமல் தேவையின்போது ஊது குழல் பாவியாமை, புகையிரதக் கடவை, பாலம், ஆகியவற்றில் முந்திச் செல்லல், மாற்றுதல், ரயர் உதிரிப்பாக நிலையை அறியாமல் ஓட்டுதல், திடீரென பிறேக் போடுதல், மழை காலத்தில் அவதானமில்லாது செலுத்துதல், வாகனம் செலுத்தும் போது செல்போன் கதைத்தல், சன நெரிசலான இடங்களில் வேகமாக ஓட்டுதல் முதலிய பல காரணங்களால் விபத்துகள் அநேகமாக ஏற்படுகின்றன.

வீதிச் சட்டப்படி 18 வயதிற்கு குறைந்த ஆண், பெண் இருபாலாரும் வாகனம் ஓட்ட முற்படுவது, தகுந்த அனுமதிப்பத்திரம் இல்லாது சாரத்தியம்செய்வது, வாகனங்களில் ஒலிபெருக்கி பூட்டி விளம்பரம் செய்வது, அதிக பாரம் ஏற்றிச் செல்வது, மிக நீண்ட வாகனங்களை உரிய நேரத்தில் செலுத்தாமை, தவறான விதிப்படி வேறு வாகனத்தினைக் கட்டி இழுப்பது என்பனவும் கவனிக்கவேண்டியதே.

### விபத்துக்களைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினரும் வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு காலத்திற்குக் காலம் பல நடவடிக்கைகளை எடுத்துவருவது வரவேற்பிற்குரியதே. உதாரணம் பயிற்சி - வைத்திய பரிசோதனை இலங்கையில், இந்தியா போன்ற சனத்தொகை கூடிய நாடுகளைவிட விபத்துக்கள் குறைவாக இருப்பினும் நாளாந்தம் நூறுக்கு மேற்பட்ட விபத்துகள் ஏற்படுகின்றன.

விபத்து வீதம் அபாயகரமானது. 37 வீதமாகவும், அதிவேகம் ஓடுவது 16 வீதமாகவும், கவனயீனமாக ஓடுவது 14 வீதமாகவும், பழுது காரணமாக ஓடுவது 10 வீதமாகவும் இருக்கின்றது. பாதசாரிகளே இவ் விபத்துக்களில் கூடுதலாகப் பாதிக்கப்படுவது அவதானிக்கக்கூடியதாக உள்ளது. காயப்படுபவருக்கும் உடனடி முதலுதவி, மருத்துவமனையில் சேர்க்காமை போன்ற தவறுகளை விடுகின்றனர். வருடா வருடம் சனத்தொகை அதிகரிப்பதுடன், வாகனப்பாவனையும் அதிகரிப்பினும் பாதைகள் அதற்கு ஊடாக செப்பனிடப்படாமல் இருப்பதினால் விபத்துகள் நடைபெற வாய்ப்புகள் உண்டு. அரசு பல திட்டங்களை அமுல்படுத்தினாலும் பொது மக்கள் இதனை சரியான முறையில் கடைப்பிடிப்பதில்லை. வீதி ஓரங்களில் கல், மண், வாகனங்கள் போன்றவற்றை விட்டுவிடுவது. நடைபாதை வியாபாரங்கள் போன்றவற்றாலும் விபத்துகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. போக்குவரத்துப் பொலிஸ் பகுதியினர் கூடிய நடவடிக்கைகள் எடுப்பதினால் விபத்துகளைத் தடுக்கமுடியும்.

பொதுமக்களும், சாரதிகளும் விபத்துச் சம்பந்தமாக தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் மூலமாக சிறுபராயத்தவர்கட்கு தெரியப்படுத்த வேண்டும். விபத்துச் சம்பந்தமான படக்காட்சிகள், படங்கள் போன்றவற்றை அறிமுகப்படுத்தி மக்களைத் திருத்த வேண்டும். சாரதிகளுக்கு வாகனம் பற்றிய திருத்தங்கள் சட்டவிதிகள் என்பவற்றை அறியச்செய்து காலத்திற்குக் காலம் சாரதி அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தல், வைத்தியப் பரீட்சைக்கு உட்படுத்தல், கண் பரிசோதனை செய்தல் போன்றவற்றை செய்து நற்சாரதிகளை உருவாக்கினால் விபத்துகளை வருமுன் காக்கலாம்.

பொது மக்கள் எதிர்பார்க்கும் பிரயாண சேவை தகுந்த முறையில் நல்ல தரமாக சுகாதார வசதியுடன் நடைபெற வீதி ஒழுங்குகளை அனைவரும் கடைப்பிடிக்கவேண்டும். நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழச்செய்வோம்.

### வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான வீதி ஒழுங்கு முறைகள்

1.நடந்து செல்பவர் எப்பொழுதும் வீதியில் வலது பக்கமாக நடந்து செல்லுங்கள். குழுக்களாகச் செல்லும்பொழுது இடது பக்கமாகச் செல்லவேண்டும்.

2. நெடுஞ்சாலையை விளையாட்டு மைதானமாக்கிக் கொள்வது மிகவும் அபாயகரமானது.

3. வீதியைக் கடக்கும் பொழுது பாதசாரிகள், பாதசாரிக் கடவைகளைப் பயன்படுத்துங்கள். இல்லாதவிடத்து முதலில் வீதியின் வலது பக்கம் பார்த்து பின்னர் இடது பக்கம் பார்த்து மீண்டும் வலது பக்கம் பார்த்து வாகனங் கள் இல்லாதவிடத்து விரைவாக வீதியைக் கடவுங்கள்.

4. நிறுத்தப்பட்டுள்ள வாகனத்தின் முன்னால் அல்லது பின்னால் வீதியைக் கடக்க முயலாதீர்கள். (அபாயகரமான செயல்)

5. வீதியில் நிறுத்தப்பட்டுள்ள வாகனத்தைக் கடக்கும் பொழுது வாகனத்தின் முன் பக்கம் அல்லது பின் பக்கம் நின்று இரு பக்கங்களிலும் வரும் வாகனங்களை கவனித்து விரைவாக வீதியைக் கடக்கவும்.

6: பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது வாகனக் கட்டுப்பாட்டாளர் வாகனங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தால் அவ்விடத்தால் அனுமதி கிடைத்ததும் பாதையின் குறுக்கே செல்லுங்கள்.

7. சிறுவீதியில் இருந்து பிரதான வீதிக்குச் செல்லும்போது தங்கள் வண்டியை நிறுத்தி பிரதான வீதியில் செல்லும் வாகனத்திற்கு முன்னுரிமை கொடுங்கள்.

8. இடது அல்லது வலது பக்கம் திரும்பும் பொழுது சரியான சைகைகளைக் காட்டி மற்றைய வாகனங்களுக்கு இடையூறு விளைவிக்காத வண்ணம் சரியான பக்கத்தால் செல்லுங்கள்.

9. பாதை தெளிவாகக் காணமுடியாத இடங்களிலும் வளைவுகளிலும் பாதைளைக் கடக்க எத்தனியாதீர்கள்.

10. துவிச்சக்கர வண்டியில் செல்லும் போது சமாந்தரமாக செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

11. துவிச்சக்கர வண்டியில் செல்லும்போது மற்றைய ஓட்டுனரை அல்லது வாகனத்தை பிடித்துக் கொண்டு செல்லாதீர்கள்.

12. துவிச்சக்கர வண்டியில் செல்லும்போது வீதியின் இடது பக்கமாக ஒருவர் பின் ஒருவராகச் செல்லுங்கள்.

13. அ.சைக்கிளில் ஓடும்போது இரு கைகளையும் விட்டு அல்லது ஒரு கையில் காண்டிலைப் பிடித்துக கொண்டு ஓடுவது.

ஆ. திடீரென பிரதான வீதியில் நுழைதல்.

இ. சுமக்க முடியாத அளவு சுமைகளைச் சைக்கிளில் கொண்டு செல்லுதல்.

ஈ. அவதானம் இல்லாமல் குடை பிடித்துக் கொண்டு சைக்கிள் ஓடுதல்.

இச் செயல்கள் மிகவும் அபாயகரமானது என்பதை மனதில் கொள்ளவும்.

14. துவிச்சக்கர வண்டியின் பாவனையாளர்கள் தங்கள் வண்டியின் பெல் (மணி) பிறேக் (தடுப்பு) ரயர்கள் என்பவற்றை அவதானித்து வண்டியை எப்போதும் சீரான நிலையில் வைத்துக் கொள்ளுங்கள்.

15. பஸ் வண்டியில் பிரயாணம் செய்யும் மாணவர்கள் மிதிபலகையில் நின்று அல்லது தொங்கிக் கொண்டு பிரயாணம் செய்வது அபாயகரமானது.

இதில் இருக்கும் உபதேசங்களைக் கடைப்பிடித்து விபத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

---

## 7 வது தேசியப் பாசறை
# திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை முதலாமிடம்

(சுதுமலை)

யாழ்.மாவட்ட மக்கள் நலன் புரிச் சங்கத்தினதும் விசேட படையணிகளினதும் எற்பாட்டில் பாடசாலை மாணவிகளுக்கான 7 வது தேசியப் பயிற்சிப் பாசறை நிகழ்வு கடந்த 19, 20 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது. 47 பாடசாலைகள் கலந்து கொண்ட இப்பாசறையில் யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை 94 புள்ளிகளைப் பெற்று சம்பியனாகியது.

இரண்டாவது இடத்தை 82 புள்ளிகளைப் பெற்று யா/ வேம் படி மகளிர் உயர்தரப்பாடசாலை யும், மூன்றாம் இடத்தை 75 புள்ளிகளைப் பெற்ற வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியும் பெற்றன.

வெற்றியீட்டிய பாடசாலைக்குரிய கேடயங்களையும் சான்றிதழ்களையும் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் எஸ்.நளன் ஆகியோர் வழங்கினர்.

(உ-252)

---

உலக சுற்றுச் சூழல் தினம் ஜூன்-05



World Environment Day- June-05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழம்.

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்

அயனமண்டல நாடுகளில் கண்டல் காடுகள் 85 வீத மான வர்த்தக மீன் இனங்களின் வளர் இடங்களாக விளங்குகின்றன.

# கல்விப் பொதுத் தராதர (சாதாரண) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

தமிழ்மொழியும் இலக்கியமும் I

மணி - 1

ஆக்கம் :
திருமதி அ. பாலகிருஷ்ணராஜா (B.A)
ஆசிரியர் யா/நவாலி மகாவித்தியாலயம்

**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

(01) சருவந்தக் குடையும் கையில் சபமணி வேலும்..... இதில் சருவந்தம் என்ற சொல்லுக்குப் பொருத்தமான சொல்
1. தலைக்கவசம் 2. கவசம் 3. சத்தியம் 4. கொற்றம்

(02) தாலமரம் தந்திடும் பலபொருட்கள். இதில் தாலம் என்பதன் ஒத்த சொல்
1. தென்னை 2. பனை 3. தாழை 4. தபசி

(03) மக்கள் கெழுதகைமை உடையவர்களாக வாழ்ந்து வந்தார்கள். இதில் கெழுதகைமை என்பதன் எதிர்ச்சொல்
1. பகைமை 2. தகுதி 3. நட்பு 4. ஒற்றுமை

(04) ஆண், பெண் இருபால்களுக்கும் பொதுவாக அமையாத சொல்
1. கவி 2. ஐயை 3. தலைவர் 4. குழந்தை

(05) வைகலும் வைகல் வரக்கண்டும்.... இதில் வைகல் என்ற சொல் இருவேறு பொருளில் வந்துள்ளன. அவையாவன,
1. நாள்தோறும், ஆயுள்
2. நாள்தோறும், வளர்தல்
3. நாள்தோறும், இருத்தல்
4. நாள்தோறும், நாள் கழிதல்

(06) குறிப்பிட்ட சில நிபந்தனைகளை ஏற்றுக்கொண்ட இரு தரப்பினருக்கிடையில் எழுதப்படும் உடன்படிக்கை
1. விண்ணப்பம் 2. விஞ்ஞாபனம் 3. ஒப்பந்தம் 4. சம்பந்தம்

(07) தமது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதிபோதாமையால் ஆண்டின் நடுப்பகுதியில் அமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் பிரேரணை
1. பற்றாக்குறை
2. குறைநிரப்பு
3. மிகைக்கொடுப்பனவு
4. பற்றாக்குறைவு

(08) விலங்குகள் இயற்கைச் சூழலில் சுதந்திரமாக வாழும் பாதுகாப்பான இடம்
1. காட்டரண் 2. வனாந்தரம் 3. விலங்ககம் 4. புகலரண்

(09) அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்பனவற்றின் தொகைப்பெயர்
1. நால்வகைப்பா 2. நாற்பொருள் 3. நாற்குணம் 4. நானிலம்

(10) WEBSITE என்பதற்குப் பொருத்தமான கலைச்சொல்
1. வையகவிரிவுவலை 2. வலைத்தளம் 3. ஊடகம் 4. பண்பலை

(11) அத்வைதம் என்ற சொல்லின் தமிழ்வடிவம்
1. அத்துவைதம் 2. அத்துவிதம் 3. அந்துவிதம் 4. அந்தவேதம்

(12) மதுரகம், அரும்பு, சாளிகை என்னும் சொற்களால் குறிக்கப்படுவது
1. வானம் 2. தேன் 3. மனம் 4. வண்டு

(13) முதுமைக் காலத் தேவைக்காகச் சேமித்து வைக்கப்படும் பொருள்
1. உப்பரிகை 2. எய்ப்பில்வைப்பு 3. களஞ்சியம் 4. காவற்காடு

(14) கன்று என்ற இளமைப்பெயர் பொருந்தி வராதது
1. பனை 2. வாழை 3. யானை 4. மான்

(15) தருமத்தின் பெருமைதனைக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமான பழமொழியாகக் கருதப்படுவது,
1. அச்சாணியில்லாத் தேர் முச்சாணும் ஓடாது
2. ஆழ அமுக்கினாலும் நாழி முகவாது
3. இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை
4. இறைத்த கிணறே ஊறும். இறையாத கிணறே நாறும்

(16) பொடிவைத்துப் பேசுதல் என்ற மரபுத் தொடர் உணர்த்தும் பொருள்
1. கட்டாயப்படுத்தல்
2. தூளாக்கிப் பேசுதல்
3. தந்திரமாகப் பேசுதல்
4. பெருமுயற்சி செய்தல்

(17) மிகுந்த கவனத்தோடு பாதுகாத்தல் என்னும் பொருள் தரும் உவமைத் தொடர்
1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல
2. உள்ளங்கை நெல்லிக்கனி போல
3. கண்ணை இமை காப்பது போல
4. சித்திரப் பதுமை போல

(18) புகையிலை அடுக்கப்பட்டிருப்பதைக் குறிப்பது
1. சிப்பம் 2. போர் 3. கற்றை 4. பாடம்

(19) வயலும் வயல் சார்ந்த பிரதேசமாகக் கருதப்படுவது
1. குறிஞ்சி 2. நெய்தல் 3. மருதம் 4. பாலை

(20) இயற்கையாக நிகழும் நிகழ்ச்சிக்கு எழுத்தாளன் ஒரு காரணத்தைக் கற்பித்துக் கூறும் அணி
1. உவமை 2. உருவகம் 3. தற்குறிப்பேற்றம் 4. தன்மைநவிற்சி

(21) பின்வருவனவற்றுள்ளே இடைச்சொல் அடியாகப் பிறந்த வினைமுற்று எது?
1. வந்தது 2. ஒலித்தது 3. பாடியது 4. படபடத்தது

(22) பின்வருவனவற்றுள் பெயரெச்சமாகக் கருதப்படுவது
1. அடித்தல் 2. அடிக்கும் 3. அடித்து 4. அடித்தது

(23) பின்வருவனவற்றுள் நெடுங்கணக்கு ஒழுங்குமுறையில் அமைந்தது
1. க,ச,ட,த,ந 2. க,ல,ள,ழ,ற 3. க,ச,ண,த,ம 4. க,ண,ய,ப,ல

(24) உடனிகழ்ச்சிப் பொருள் வரக்கூடிய வேற்றுமை
1. மூன்று 2. நான்கு 3. ஐந்து 4. ஆறு

(25) கழிமகிழ்வெய்தினார்கள். இதில் வந்துள்ள கழி என்பது
1. பெயர்ச்சொல் 2. இடைச்சொல் 3. வினைச்சொல் 4. உரிச்சொல்

(26) பூங்குழல் வந்தாள் என்பது
1. உவமைத்தொடர் 2. பண்புத்தொகை
3. உம்மைத்தொகை 4. அன்மொழித்தொகை

(27) சிலேடைச் சொல்லாகக் கருதப்படுவது,
1. நூல் 2. பழங்கறி 3. மரம் 4. அழகிய கை

(28) இயல்புப் புணர்ச்சிக்கு உதாரணமாகக் கொள்ளப்படுவது,
1. சொன்னயம் 2. மட்பாண்டம் 3. மரவேர் 4. புயலோசை

(29) உடனிலை மெய்ம்மயக்கமாகக் கருதப்பட முடியாதது
1. அன்னம் 2. இன்பம் 3. திண்ணம் 4. முந்நூறு

(30) சுடுகாட்டை நன்காடு எனக் குறிப்பிடுவது
1. தகுதி வழக்கு 2. இயல்பு வழக்கு 3. குழூஉக்குறி 4. மரூஉ

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

(31) இடைவிடாமல் முயன்றாலன்றோ
1. உயர்வுக்கு வழி கிட்டும்
2. உயர்வுக்கு வழி
3. உணவுப் பஞ்சம் நீங்கும்
4. உணவு கிடைக்கும்

(32) விவசாயியால்
1. வயல் உழுது பண்படுத்தினான்
2. வயல் உழப்பட்டு பண்படுத்தினான்
3. வயல் உழுது பண்படுத்தப்பட்டது
4. வயல் உழுது பயன்படுத்தினான்

(33) நடிகர் குழு பலரது கரகோசத்தின் மத்தியிலே மேடையிலே
1. தோன்றினர்
2. தோன்றின
3. தோன்றியது
4. தோன்றினார்கள்

(34) அவன் பரீட்சையில் சித்தியடைந்திருந்தமைக்குக் காரணம் ஊக்கத்துடன் கல்வி
1. கற்றமையாகும்
2. கற்றதனாலாகும்
3. கற்றமையினாலாகும்
4. கற்றிருந்தமையேயாகும்

(35) பொய்யுங்களவும் நன்மை
1. தரவில்லை
2. தரா
3. தந்தது
4. தரும்

**பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

செம்மனத்தான் றண்ணளியான் செங்கோலான் மங்கையர்தம்
மனத்தை வாங்கும் தடந்தோளான் - மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கா
னுளனென்பான் வேந்த னுனக்கு.

(36) இப்பாடல் எந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?
1. சிலப்பதிகாரம்
2. நளவெண்பா
3. மணிமேகலை
4. இராமாயணம்

(37) இப்பாடலில் குறிப்பிடப்படும் சிறப்பு
1. நாட்டுச் சிறப்பு
2. கொடைச் சிறப்பு
3. ஆட்சிச் சிறப்பு
4. நகர்ச் சிறப்பு

(38) மேனிலம் எனக் குறிப்பிடுவது
1. பாதாளலோகம்
2. மண்ணுலகம்
3. சுவர்க்கம்
4. ஐந்நிலங்கள்

(39) உளனென்பான் வேந்தனுனக்கு. இதில் உனக்கு என்ற பதம் உணர்த்துவது
1. மணிமேகலை
2. கண்ணகி
3. தமயந்தி
4. சீதை

**கீழே உள்ள வாக்கியங்களை ஒழுங்கமைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு அமைப்பதற்குப் பொருத்தமான முறையைத் தெரிவு செய்க.**

(40) (அ) அவனுக்குப் பிற உயிர்களுக்கு இல்லாத பகுத்தறிவு இருக்கிறது.
(ஆ) பஞ்சபூதங்களும் அவன் வசப்பட்டு அவனுக்கு ஊழியஞ் செய்து கொண்டு நிற்கின்றன.
(இ) உயிரினங்களுள்ளே ஆறறிவு படைத்த மனிதனே சிறப்பு மிகுந்தவனாக விளங்குகின்றான்.
(ஈ) மனிதன் தன் பகுத்தறிவினைத் துணையாகக் கொண்டு அரிய பல காரியங்களை நிறைவேற்றி வருகின்றான்.
(உ) மிகச்சிறிய அணுவுக்குள்ளும் அவனுடைய கண் ஊடுருவிச் சென்றுவிட்டது.
1. இ, அ, ஈ, ஆ, உ
2. உ, ஆ, இ, அ, ஈ
3. ஆ, இ, அ, உ, ஈ
4. ஈ, ஆ, இ, அ, உ

(40 x 1 = 40 புள்ளிகள்)

நாளை தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி - I இற்கான விடையுடன்,
பகுதி - II இற்கான வினாக்களும் வெளிவரும்.

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

**பதினொராம் திருவிழா**



## அழகு பூந்தண்டிகைத் திருவிழா

ஐயிரண்டுமொன்றும் இன்று திருவிழா
அருட்சின்னக் கற்களுக்கும் பெருவிழா
அலைகடலும் புயற் காற்றுமோய
அன்னையுடன் வாயுபட்சணி வீதியுலா
அனைவர்க்குமாய் அன்னையருள் வேண்டி-நயினை
அரசபணியாளரேத்து தண்டிகைத்திருவிழா

'நயினையான்'

## அம்பிகையைத் தொழுகின்றேன்

அம்பிகையே அருள் மழை பொழியும் நாகபூசணியே
நாப் பழுக்க உனது திருநாமந் தன்னை
நாள் தவறாத் துதித்து வரும் சிறியே னென்னை
அரவப் பெருங் குடை நிழலில் அணைத்து வைத்தே
மூப்பழுக்க முன்னம் மூவாசை போக்கி
முத்திப் பேரின்பநிலை காட்டிடரம்மா
வேப்பமரத் தோப்பு நிழல் கோயில் கொண்ட கோமகளே
வந்தழுதேன் என்பாவங்கள் தொலைப்பாயென்றும்
வாரியணைத் துன் மடியில் வைப்பாயென்றும்
நொடிப்பொழுதில் கையேந்திக் காப்பாயென்றும்
தொழுகின்றேன் தினம் உனையே
அம்பிகையே நயினையுறை நாகேஸ்வரியே

கைதடியூர்
S.கண்ணன்.

## அபிராமித் தாயே நீயே கதி

கலைஞானம் சொல்கின்ற நயினைப்பதி- இங்கு
கரையெங்கும் அலை வந்து சொல்லும் கவி
அலைகடல் தாண்டி வந்தாலே அருளும் நிதி
அபிராமித்தாயே நீயே கதி

பூக்கொண் டு நாகங்கள் வந்து
உனைப்போற்றிய வரலாறு உண்டு
காக்கின்ற தெய்வமே என்று
காசினி போற்றுது இன்று

மணிபல்லவத் தீவிலே அமர்ந்து -உலக
மாந்தரின் துயரினைப் போக்கும்
வல்லவள் உன்னருளாலே- இந்த
வையகம் வாழுது வரந்தருவாயே

அகதியாய் ஓடியோடி அலுத்தனம்- மீண்டும்
புதியதோர் வாழ்வு தேடி புகுந்தனம்- மண்ணின்
துயரினை போக்க வேண்டி துதிக்கிறோம்- உன்னை
நயினையம்பதி தாயே நல்வழிகாட்டு அம்மா

கவிஞர் வேலணையூர்
பாக்கியன்.

## காட்சி தாராயோ

நாதர் முடி மேலிருக்கும்
நல்ல பாம்பு குடைபிடிக்க
அலைகடல் நடுவினிலே இருந்து
அம்மா தாயே சரணமென்று
உன்னடியை நாடி வந்தோம்
துயரங் கொள்ள வைக்காதே
சிவ சக்தியானவளே எமக்கு
கைலைக் காட்சி தாராயோ

ரூபன்
ஆனைக்கோட்டை

# 14 வயதுக்கு உட்பட்ட

# 4 இலட்சத்து 31 ஆயிரத்து 668 சிறார்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

5வயதுக்கும் 14வயதுக்குமிடைப்பட்ட 4இலட்சத்து 31 ஆயிரத்து 668 சிறுவர்கள் பாடசாலைகளுக்கு இடைநடுவில் போகாமல் விட்டுள்ளனர்.

இத் தொகையானது நாட்டிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயில்கின்ற மாணவர்களில் 10சதவீதமாகும். வடக்கு- கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தமட்டில் 5வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட நிலையில் சுமார் ஒரு இலட்சத்து 30ஆயிரம் சிறுவர்கள் பாடசாலைக் கல்விக்கு முழுக்குப் போட்டுள்ளனர்.

இது இவ்விதமிருக்க பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தமது பாடசாலைக் கல்விக்கு இடையில் குறுக்கீடுகளை ஏற்படுத்தியுள்ள சிறுவர்களை மீளவும் கல்விச் செயல் பாடுகளில் ஈடுபடுத்துவதற்கான பல வகைத் திட்டங்களுக்கு அரசும், அரசசார் பற்ற நிறுவனங்களும் பெருந்தொகை யான நிதியைப் பயன்படுத்தி வருகின்ற போதிலும் கூட அவற்றில் உடனடித் தாக்கங்ளோ அல்லது மாற்றங்களோ ஏற்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இதேவேளை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அமைக்கப் பட்டுள்ள சுமார் 177 இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 5 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட ஆயிரக் கணக்கான சிறுவர்கள் கல்வியைத் தொடர்வதற்கான அடிப்படை வசதி கள் வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் பாடசாலைக் கல்விக்கு முழுக்குப் போட்டுள்ளனர்.

அத்துடன் யாழ்ப்பாணக்குடா நாட்டில் 18வயதுக்குட்பட்ட நூற்றுக் கணக்கான சிறுவர்கள் தொழில் முயற்சிகளில் இன்றும் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சிறுவர் மேம்பாடு, சிறுவர் உரிமைகள் குறித்து பல வகையான விழிப்பு ணர்வுச் செயல்பாடுகள் இடம் பெற்று வருகின்ற போதிலும் அவை யாவுமே நடை முறையில் பின்பற்றப்படாமல் இருந்து வருவதும் சுட்டிக்காட்டத்தக்கது. (உ-16)

## ரயில் தடம் புரளும் வீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த 6 மாதங்களில் புகையிரதம் தடம்புரளும் வீதம் கடந்த வருடத்தை விட 20வீதத்தால் அதிகரித்துள்ளதாகப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

புகையிரதம் தடம் புரள்வதைத் தடுக்கும் நோக்குடன் நாடு தழுவிய குறுகிய கால வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இதன் முதல் கட்டமாக சேதமடைந்துள்ள சிலிப்பர்க் கட்டைகளை அடையாளம் கண்டு திருத்தப்படவுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சின் செய லாளர் தெரிவித்துள்ளார்.

இத் திட்டம் நிறைவேற்றப் பட்டதும் 100புகையிரதப் பெட்டிகள் திருத்தப்படவுள்ளதாகவும் இதன் மூலம் இனிவரும் காலங்களில் புகையிரதப் போக்குவரத்தில் ஏற்படும் தாமதம் நிவர்த்தி செய்யப் படும் என அவர் மேலும் தெரிவித்தார். (உ-2)

## சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு

(கொழும்பு)

சுகாதாரத்துறை ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பினை எதிர் வரும் ஜூலை மாதச் சம்பளத்துடன் வழங்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறி பால டிசில்வா அறிவித்துள்ளார்.

சம்பள அதிகரிப்பை உடனடியாக வழங்குமாறும் இல்லாவிட்டால் நாளை செவ்வாய்க்கிழமை முதல் நாடு தழுவிய ரீதியில் சுகாதார ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்றும் சுகாதாரத்துறை தொழிற் சங்க கூட்டமைப்பு தனக்கு அறிவித்திருந்ததையடுத்தே தான் இத்தகைய முடிவை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ-10)

## சொல்ஹெய்ம் இன்று இலங்கை வருகிறார்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வே விசேட சமாதானத்தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் இன்று இலங்கை வருகின்றார்.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான அடுத்த கட்டப் பணியை மேற்கொள்வதற்காக இலங்கை வரும் சொல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார். (உ-10)

## பொங்கல் விழா

(பூநகரி)

வேரவில் பூநகரி ஸ்ரீதுத்திய ஐயனார் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 6,7ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

(உ-2)





தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந் திரன் நேற்றைய தினம் வேலணைக்குச் சென்று தீவுப் பகுதிப் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந் தித்து அப்பகுதிகளில் நிலவும் குறைகளை கேட்ட றிந்த போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்:- சதீபன்)



இலங்கை வங்கி யாழ். மேற்தரக் கிளையின் பாதுகாப்பு அதிகாரியாக அண்மையில் பதவி உயர்வு பெற்ற ரீ.கருணாகரன் இலங்கை வங்கியின் மகரகம பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்ற பதவி உயர்வு பெற்றவர்களுக்கான பயிற்சிப் பாசறையில் அதி சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதினைப் பெற்றுக்கொண்டார். இலங்கை வங்கி பொது முகாமையாளர் பீ.பளீகேன விடமிருந்து அவர் விருதினைப் பெறுவதையும், அருகில் பாதுகாப்புப் பணிப்பாளர் கேணல் பி.ஜீ.யூ.பீரிஸ் நிற்பதனையும் படத்தில் காணலாம்.

(படம்:-சுண்டுக்குளி நிருபர்)

## இன்று ஒரு தகவல்

# கனவும் விழிப்பும் !

ஒரு ஆள் இருந்தான். அவனால் தனது குடும்பதைக் காப்பாற்ற முடியவில்லை அதனால் என்ன செய்தானென்றால் ஒருநாள் இரவு மெதுவாக எழுந்தான்.வீட்டைத் திறந்து வெளியே வந்து விட்டான். மனைவி,மகன் ஒருவன் இருவரையும் தனியே விட்டு விட்டுப் போய் விட்டான்.

அவனது பிள்ளைக்குத் தந்தை மீது மிகுந்த பாசம் அதனால் தந்தையின் பிரிவை அவனால் தாங்கிக்கொள் முடியவில்லை. ஏங்கி ஏங்கி ஒருநாள் அவன் செத்துவிட்டான். வீட்டை விட்டு வெளியே சென்ற தந்தை என்னென்னவோ செய்து கொஞ்சம் பணம் சம்பாதித்தான். பணம் சம்பாதித்தவுடன் வீட்டுக்குத் திரும்பி விடலாம் என்ற நினைப்பு வந்துவிட்டது.

பணத்துடன் தனது கிராமத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான். வழியில் மழை பிடித்துக்கொண்டது. கடுமையான மழை அதனால் இவன் அங்கேயிருந்த ஒரு சத்திரத்தில் தங்கி விட்டான். இரவு தூக்கத்தில் ஒரு கனவு.அந்தக் கனவில் அவன் ஒரு பெரிய ராஜா. தங்க சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தான். சுற்றிலும் ஏராளமான சேவகர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வதற்குத் தயாராக இருந்தார்கள்.

அந்த ராஜாவுக்கு ஆறு மகன்கள். எல்லோரும் இளவரசர் கோலத்தில் ஆடம்பரமாக ஆனந்தத்துடன் இருந்தார்கள். அருமையான கனவு. எந்தக் கவலையும் இல்லாமல் இவன் படுத்துக் தூங்கிக்கொண்டிருந்தான். இந்தச் சமயத்தில் திடீரென்று ஒரு பெரிய இடிமுழக்கம் இவன் முழித்துக் கொண்டான். கனவும் கலைந்து விட்டது.

கண்ணைத் திறந்து பார்த்தான். ஒன்றையும் காணவில்லை. "ஐயோ என்ன இது... இதுவரைக்கு நான் படுத்திருந்த ஹம்ஸதூளிகா மஞ்சம் எங்கே? நான் பெரிய மகாராஜாவாக இருந்தேனே அந்தப் பதவி எங்கே போய்விட்டது. எனக்கு சேவை செய்து கொண்டிருந்த பணியாளர்கள் எல்லோரும் எங்கே போய்விட்டார்கள்?" என்று யோசனை செய்தான். அருகில் இருந்தவர்களையும் விசாரித்தான். அவர்களும் படுக்கையிலிருந்து எழுந்திருந்து "ஏதாவது கனவு கண்டிருப்பாய்!" என்றார்கள்.

எல்லாம் கனவு என்று தெரிந்ததும் அவனுக்கு ஏமாற்றமாகி விட்டது. ஆறு அரச குமாரர்களையும் காணவில்லையே என்பதில் அவனுக்கு மிகவும் வருத்தம். இருந்தாலும் என்ன செய்வது? காலையில் எழுந்தான் வீடு போய்ச்சேர்ந்தான். இவனைப் பார்த்ததும் மனைவிக்கு மிகவும் மகிழ்ச்சி. அதேநேரம் மகனை நினைத்து அழுகை "எங்கே நமது பிள்ளை?" என்று கேட்டான் இவன். "உங்கள் பிரிவு தாங்காமல் இறந்து விட்டான்" என்றார் மனைவி.

அதைக் கேட்டதும் இவனுக்கு அழுகை வரவில்லை. அப்படியே சிலை மாதிரி நின்றுவிட்டான். மனைவிக்கு இது வியப்பாக இருந்தது. "என்ன இது நமது பிள்ளை மீது எவ்வளவோ அன்பும் பாசமும் வைத்திருந்தீர்கள். இப்படி நிற்கிறீர்களே.அது எப்படி முடிகிறது உங்களால்?" என்று கேட்டார்.

அதற்கு இவன் சொன்னான் "நேற்றிரவு நான் ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தேன். அங்கே ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவில் நான் ஒரு அரசன். ஹம்ஸதூளிக மஞ்சத்தில் படுத்திருந்தேன். என்னைச் சுற்றி ஏகப்பட்ட பணியாளர்கள். அங்கே எனக்கு 6 குமாரர்கள். கண் விழித்துப் பார்த்த போது அவர்கள் யாருமே இல்லை.

இப்போது நான் கனவில் வந்து போன அந்த 6 குமாரர்களுக்காக அழுவதா? இல்லை. இங்கே வந்து போன இந்த ஒரு மகனுக்காக அழுவதா? அவர்கள் கனவில் வந்த குமாரர்கள். இவன் விழிப்பில் வந்த குமாரன். விழிப்பு நிலையில் கனவு கிடையாது.கனவில் விழிப்பு நிலை கிடையாது. ஆனால் இரண்டிலும் நான் இருக்கிறேன். அப்படியென்றால் நான் Omnipresent மற்றதெல்லாம் நகரும் மேகங்கள். இந்த உண்மையை ஒரு பெரியவர் அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

இதை முழுதாகப்புரிந்து கொண்டால்வாழ்க்கை நமக்கு ஒரு ஆனந்தம் தான். ஆனால் நம்மில் பலர் இந்த உண்மையை சரியாகப் புரிந்து கொள்வதில்லை. இவர்கள் எல்லோரும் கனவையே வாழ்க்கையாக நினைப்பவர்கள்.

ஒருவனுக்குத் தூக்கத்தில் நடக்கும் வியாதி. டாக்டரிடம் போனான் மருந்து உட்கொண்டான். "ஏனப்பா என்னிடம் வைத்தியம் பார்த்தாயே இப்போது எப்படி இருக்கிறது? ஏதாவது முன்னேற்றம் இருக்கிறதா? என்றார். "நல்ல முன்னேற்றம் தான்" என்றான் அவன். "எப்படி? என்று கேட்டார் டாக்டர். முன்பு தூக்கத்தில் 10அடி தூரம் தான் நடப்பேன். இப்போது 100 அடி தூரம் போய் விட்டு வருகிறேன்" என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இடைக்காலத் தன்னாட்சி அரசு குறித்த புலிகளின் கோரிக்கை நியாயமானது

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு


(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு குறித்துப் பேசுவதற்கு முன்னர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றி முதலில் பேச வேண்டும் என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டில் தவறுகள் ஏதும் இல்லை என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்றி லன்ஸ்டன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய பத்திரிகைகளின் ஆசிரியர்களுடனான சந்திப்பொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு ஒன்று ஏற்படுவதற்கு முன்னர் இடைக்காலத் தீர்வொன்று அவசியம்.



இத்தகைய ஒரு இடைக்காலத் தீர்வு தொடர்பாக பேசவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் கோருவதில் எந்தவித தவறும் இல்லை.

அத்துடன், இரு தரப்புக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முக்கிய விடயமாக இருக்கும். விடுதலைப்புலிகளுடைய இடைக்கால நிர்வாக யோசனை குறித்து இப்போது விமர்சிப்பது பயனான விடயம் இல்லை எனத் தெரிவித்தார். (உ-121)

# அரசின் எந்தச் சவாலையும் எதிர்கொள்ள தலைவர் தயார்

## அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் உரை

(கொழும்பு)

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் இலங்கை அரசினால் விடுக்கப்படுகின்ற எந்தவொரு சவாலுக்கும் முகங்கொடுத்து அதனைச் சந்திக்கத் தயாராகவுள்ளார் என்று தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் சூளுரைத்துள்ளார்.

மானிப்பாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மூன்றாவது சங்கம நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் தேசிய எழுச்சிப் பேரவை செயலளர் சூ.சிறில் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில்,

இன்று தாங்கள் தமிழீழத் தேசத்தின் உரிமையாளர்களாகவும் இந்தத் தேசத்தை ஆளக் கூடியவர்களாகவும் இருக்கிறோம். இத்தனை பலமிக்க ஒரு சக்தியாக இருப்பதற்கு நாம் அனைவரும் ஓரணியில் அணிதிரள வேண்டும் என அங்கு திரண்டிருந்த மக்களிடம் அவர் கேட்டுக் கொண்டார்.

இந் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. எஸ்.சிவசேன்,யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப் பாளர் கலைவிழி, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வகுமார் ஆகியோர் உரையாற்றினர். (ம)

## இராசி பலன்

28.06.2004

(ஆனி 14,திங்கட்கிழமை)

சுவாதி அமிர்தம் பி.ப 5.35.வரை

ஏகாதசி பின்னிரவு 2.48 வரை

இராகுகாலம் 7.26-8.56 வரை

சுபநேரம் 11.56-1.26 வரை

சயன ஏகாதசி விரதம்

**மேடம்**
நண்பர் சந்திப்பு, காரிய சித்தி, பெருமை, தேக சௌக்கியம்.

**இடபம்**
புதிய சிந்தை, தொழிலில் ஆர்வம், நல்ல முயற்சி, மன மகிழ்ச்சி.

**மிதுனம்**
தாழ்ந்த சுபாவம், முயற்சி தாமதம், குடும்பக்கவலை, போசன சுகம்.

**கடகம்**
உடல் நலக்குறைவு, திடீர் நன்மை, கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம்.

**சிங்கம்**
சந்தோசம், பிரயாணசுகம், நல்ல முயற்சி, நண்பர் சந்திப்பு.

**கன்னி**
தனவிரயம், காரிய தாமதம், நண்பர் விரோதம், குடும்பக் கவலை.

**துலாம்**
சயனசுகம், புதிய முயற்சி, நேர்மை, பிரயாணம்.

**விருச்சிகம்**
காரிய அலைச்சல், நிலை மாற்றம், மனக்கிலேசம், தொழில் மந்தம்.

**தனுசு**
சுப நிகழ்வு, தன இலாபம், குடும்ப மகிழ்ச்சி, விருந்துபசாரம்.

**மகரம்**
உற்சாகம், செய் தொழில் விருத்தி, குடும்பநலம், தூரதேசச்செய்தி.

**கும்பம்**
காரியதாமதம், பித்த ரோகம், பிரயாணம், மனக் குழப்பம்.

**மீனம்**
உடல் வியாதி, வீண் பகை, காரிய தாமதம், வாகன பயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## மத மாற்றச் சட்டமூலத்திற்கு ஹெல உறுமய ஆதரவு

(கொழும்பு)

மத மாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அரசாங்கத்தின் சட்டமூலத்திற்கு ஆதரவு வழங்கப்போவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து கட்சியின் பேச்சாளர் அத்துறலிய ரத்தின தேரர் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் மதமாற்றங் களைத் தடுப்பதே அரசினது இச்சட்ட மூலத்தின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.

அவ்வாறானால் மட்டுமே எமது கட்சி அதற்கு ஆதரவு தெரி விக்கும். இதேவேளை மதமாற்ற நடவடிக்கையில் ஈடுபடு வோர்களுக்கு அதிக பட்சத்தண்டனைகள் வழங் கப்பட வேண்டும் எனவும் அரசைக் கேட்டுள்ளார். (உ-60,10

## வடக்கு - கிழக்கில் 50ஆயிரத்துக்கும் அதிகமா[ன] சிறார்கள் கல்விக்கு முழு[க்கு]

(வவுனியா)

வடக்கு-கிழக்கில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் சிறார்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை என வடக்கு கிழக்கு மாணக் கோட்ட திட்டப் பணிப்பாளர் ரி.லங்க நேசன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவி[த்] துள்ளார்.

வடக்கு-கிழக்கில் 2ஆயிரம் பாடசாலைகள் உள்ளபோது யுத்தப் பாதிப்புக்களின் விளைவாக இவற்றில் 150 பாடசாலைகள் இயங்குவதில்லை.

அத்துடன், இங்கு 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பாடசாலைகள் பல இயங்குகின்றன.

இதைவிட 16 வீதமான தமிழ் மாணவர்கள் வறுமையால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இவர்கள் தமது கல்வியை இடை நிறுத்தும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் அ[வர்] மேலும் தெரிவித்துள்ளார். (உ-4,6

## கூட்டம்

(பொன்னாலை)

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கத்தின் 23வது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஜூலை மாதம் 19ஆம் திகதி சங்கானை போத்தலடைப் நிலையத் தில் சங்கத் தலைவர் க.இராசரத்தின தலைமையில் நடை பெறவுள்ளது. (உ-49

# ஈராக் கார்குண்டுவெடிப்பில் 40 பேர் பலி 22 பேர் காயம்

## துருக்கியர் மூவர்

(பக்தாற்)

ஈராக்கின் புராதன நகரான பபிலோனுக்கருகில் உள்ள ஹில்லா நகரின் சதாம் பள்ளிவாசலில்







இடம் பெற்ற பாரிய கார் குண்டுவெடிப்பில் 40 பொதுமக்கள் பலியானத்துடன் 22 பேர் படுகாயங்களுக்குள்ளாயினர்.

சனிக்கிழமை இரவு இடம் பெற்ற இச் சம்பவம் ஈராக்கில் அதிகரிக்கும் இஸ்லாமியத் தீவிரவாதத் தாக்குதல்கள் பதவியேற்கவிருக்கும் புதிய அரசாங்கத்திற்குப் பாரிய பிரச்சினைகளை உண்டுபண்ணும் என்று கோடி காட்டுகின்றன.

ஹில்லா நகரில் சதாம் பள்ளி வாசல் என்று அழைக்கப்படுமிடத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த இரண்டு கார்கள் வெடித்ததில் மேற்படி அனர்த்தங்கள் நிகழ்ந்ததாக ஈராக்கின் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்தது.

இதேவேளை நேட்டோ மாநாட்டில் பங்கு கொள்ள ஜனாதிபதி புஷ் துருக்கிக்கு வருவதற்குச் சில மணிநேரம் முன்னதாக அந்நாட்டவர் மூவரைத் தீவிரவாதிகள் பனையமாகப் பிடித்துள்ளனர். ஈராக்கிலிருந்து துருக்கி வெளியேறாவிடின் 72 மணித்தியாலங்களில் இவர்களின் தலை கொய்யப்படும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர். (யே)

# புஷ்ஷின் துருக்கிய விஜயத்திற்கு இடதுசாரிகள் கடும் எதிர்ப்பு

(அய்காரா)

நேட்டோ மாநாட்டில் பங்கு பற்ற துருக்கியின் தலைநகர் இஸ்ரான்புல்லுக்கு அமெரிக்க ஜனாதிபதி வந்து சேருவதற்குச் சில மணித்தியாலயங்களுக்கு முன் இடதுசாரிகள் பெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.




தொழிற்சங்கங்களைச் சேர்ந்த சுமார் ஆறாயிரம் ஆர்ப்பாட்டக்காரர்கள் அய்காரா நகரில் அமெரிக்காவுக்கெதிரான கோஷங்களை எழுப்பினர். இவர்களில் சுமார் 150பேர் பொலிஸாரின் தடைகளை இரண்டு தடவையாக உடைத்துக்கொண்டு முன்னேறிய பொழுது பொலிஸார் கண்ணீர்ப் புகைப்பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர்.

நேட்டோ மாநாட்டின் பாதுகாப்புக்காக இருபத்து மூவாயிரம் பொலிஸார் தலைநகரில் குவிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி புஷ் பிரிட்டிஷ் பிரதமர் ரோனி பிளேயர், பிரெஞ்சு ஜனாதிபதி ஜக் குயிஸ்சிராக் உள்ளிட்ட நேட்டோத்தலைவர்களின் மாநாடு இன்று ஆரம்பமாகிறது. (யே)

# இஸ்ரேலியத் தாக்குதலில் ஆறு தீவிர வாதிகள் பலி

(ரமல்லா)

இஸ்ரேலிய இராணுவம் தாக்கியதில் இஸ்ரேலினால் தேடப்பட்டு வந்த மிக முக்கிய தீவிர வாதத் தலைவர் உட்பட ஆறு தீவிரவாதிகள் பலியாகினர். இவர்களில் ஒருவர் காமாஸ் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று அறிவிக்கப்படுகிறது.




இரண்டு நாட்களாக நடைபெற்ற தேடுதல் வேட்டையின் போது சந்தேகத்துக்கு இடமான வீடு ஒன்றை முற்றுகையிட்ட இஸ்ரேலிய இராணுவத்தினர் இரகசிய அறை ஒன்றில் ஆள் நடமாட்டத்தை அவதானித்த போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். மாட்டத்தை அவதானித்த போது துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொண்டனர். இதில் அல் அக்ஸா இயக்க உறுப்பினர் ஐவர் இறந்தனர் இவ் இயக்கத்தின் கிழக்குக் கரைத் தலைவரான அபு ஷாக் வீட்டைவிட்டு வெளியேறும்போது கொலை செய்யப்பட்டார்.

இத்தாக்குதலில் கொல்லப் பட்டவர்கள் அனைவரும் தேடப் பட்டு வந்தவர்கள் என்று பலஸ்தீன அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (யே)

WORLD NEWS உலக தரிசனம்

# ஆப்கான் குண்டு வெடிப்பில் தேர்தல் பணியாளர் பலி

(ஜலலாபாத்)

நேற்று முன்தினம் ஜலலாபாத்தில் இடம் பெற்ற பஸ்குண்டு வெடிப்பில் 2 பெண் தேர்தல் பணியாளர்கள் கொல்லப்பட்டதோடு மேலும் ஒன்பது பெண் தேர்தல் தொழிலாளர் காயமடைந்தனர். இரண்டு சிறுவர்களும் இதில் காயமடைந்தனர். இத்தாக்குதலுக்கு தலிபான்கள் உடனடியாக உரிமை கோரினர்




எதிர் வரும் செப்ரெம்பரில் நடைபெறும் தேர்தல்களை குழப்பும் முகமாகவே இத் தாக்குதல்கள் இடம் பெறுவதாக தலிபான் பேச்சாளர் அப்துல் லத்தீப் ரோய்டருக்கு தொலை பேசி மூலம் அறிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் தேர்தல் பணியாளர்கள் பயணித்த பஸ் வண்டி மேற்படி தாக்குதலால் சிதறுண்டது. இதேவேளை ஆப்கானின் கிழக்குப்பகுதியில் இரண்டு அமெரிக்க வீரர்கள் தலிபான்களால் கொல்லப்பட்டதோடு பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த துருக்கியர் ஒருவர் விடுவிக்கப்பட்டுள்ளார். (யே)

## மியன் மாரில் குண்டு வெடிப்பு

(யங்கூன்)

மியன் மாரின் தலைநகர் யங்கூனின் ரயில் நிலையமொன் றில் இடம் பெற்ற குண்டு வெடிப்பையடுத்து ரயில் நிலையம் மூடப்பட்டது.

ஆயினும் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்படுகிறது. ரயில் நிலையத்தின் நடைபாதையில் இடம்பெற்ற இக் குண்டு வெடிப்புத் தொடர்பில் மியன்மார் அரசு பின்னர் அறிவிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (யே)

## செக் பிரதமர் ராஜினாமா

(பிராகுவே)

கடந்த புதன்கிழமை இடம் பெற்ற ஆளுங்கட்சியின் நம் பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பில் மயிரிழையில் தப்பிப் பிழைத்த செக் குடியரசின் பிரதமர் விளாடிமிர் ஸ்பிட்லா தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

ஆளும சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் பதவியையும் அவர் ராஜினாமாச் செய்ய வுள்ளார். தமது கட்சியினுள்ளே தமக்கு ஆதரவில்லாத நிலைமை தோன்றியுள்ளதையடுத்தே அவர் பதவியை ராஜினாமாச் செய்வதாக அறிவிக்கப் படுகிறது. (யே)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமை போர்த்துக்கலுக்கு?

(எனிஸ்-அயர்லாந்து)

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான புதிய தலைவரைத் தேடும் பணியில் அயர்லாந்து முக்கிய பங்காற்றிவரும் இவ்வேளை போர்த்துக்கல் பிரதமர் ஜோஸ் டீயூராவ் பரஸ்ஸோவின் பெயரை அயர்லாந்துப் பிரதமர் பிரேரித்துள்ளார்.





இதுகுறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரஸல்ஸ் மாநாட்டில் தாம் கூடி ஆராயவுள்ளதாகவும் ஏனைய உறுப்பு நாடுகளின் தலைவர்களிடம் இதுபற்றிப் பேசவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். அமெரிக்காவுடனான கலந்துரையாடலின் பின்னரே போர்த்துக்கலின் தலைமைத்துவம் பற்றிய பேச்சு எழுந்துள்ளது.

இதேவேளை, போர்த்துக்கலில் வெளியாகியுள்ள செய்திகளின்படி ஜோஸ் பரோஸஸ்ஸின் பெயர் மேற்படி பதவிக்குச் சிபாரிசு செய்யப்பட்டதாகவும் அவர் அதனை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (யே)

# பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி பதவியில் இருந்து ராஜினாமா

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் சபருல்லாக்கான் ஜமாலி தனது பதவியை ராஜினாமாச் செய்து தனது அமைச்சரவையையும் கலைத்து விட்டதாக நேற்று முன் தினம் அறிவித்துள்ளார்.




ஆளும் கட்சியின் தலைவரான சவுத்திரி சுஜாத் ஹுசெய்ன் இவரின் இடத்திற்கு நியமிக்கப் பட்டுள்ளதாக பி.எம்.எல்.கியூ கட்சி அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் அரசியல் நீரோட்டத்தின் வளர்ச்சிக்குத் தனது ராஜினாமா உதவிபுரியும் என்று ஜமாலி கூறியபோதும் அது பற்றி விரிவாக அவர் எதையும் கூறவில்லை.

பாராளுமன்றில் எதிர்க்கட்சிகளின் வாதங்களைத் திறமை யாக எதிர்கொள்வதில் ஜமாலி சோபிக்கவில்லை என்று ஜனாதிபதி முஷாரப் மறைமுக எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளார். இதுவே அவரது ராஜினாமாவுக்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

ஐந்து வருடங்களுக்கு முன் இரத்தம் சிந்தாத சதி மூலம் ஆட்சிக்கு வந்த முஷாரப் இந்தியாவுடனான புதிய பேச்சுவார்த்தைகள், ஜனநாயக சீர்திருத்தம் என்பவற்றில் ஈடுபட்டிருந் வேளை ஏற்பட்டிருக்கும் இத் திடீர் மாற்றம் குறித்து உலகம் ஸ்தம்பித்துள்ளது. (யே)

# புலிகளின் தடையை நீக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை

# வை.கோபாலசாமி நம்பிக்கை

சென்னை)

**இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டிய சூழ்நிலை வருங்காலத்தில், ஏற்படும் என ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**

சென்னையில் கடந்த சனியன்று நிருபர்களிடம் அவர் கூறியதாவது, இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே சுமுகப் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதில் இந்தியா ஆக்கபூர்வ ஒத்துழைப்பை அளிக்க வேண்டும் என ம.தி.மு.க. வலியுறுத்தியது. அதன் அடிப்படையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் குறைந்தபட்சச் செயல் திட்டத்தில் அக்கோரிக்கை சேர்க்கப்பட்டது.

ஆக்கபூர்வ ஒத்துழைப்புக்கு ஒப்புக் கொண்டதால், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கும் சூழ்நிலை வருங்காலத்தில் உருவாகும் என நம்புகிறேன்.

*சேது சமுத்திரத் திட்டம்*

சேது சமுத்திரத் திட்டத்தை விரைவாக முடிக்க வேண்டும் என ம.தி.மு.க கோருகிறது. இவ்விடயத்தில் மாநில அரசுக்குப் போதிய அக்கறை இல்லை.

புதிய அரசு வரும்போது பழைய அரசில் நடந்த தவறுகளைச் சரி செய்வது இயல்புதான். நாட்டுக்கு நல்லதை இந்த அரசு செய்யும்.

மக்களவைத் தேர்தல் தோல்விக்குப் பிறகு ஏராளமான சலுகைத் திட்டங்களை முதல்வர் ஜெயலலிதா அறிவித்து வருகிறார். இதனால் மக்கள் நம்பிக்கையை மீண்டும் பெற்றுவிட முடியாது.


முதல்வர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கு கர்நாடகத்தில் நடக்க உள்ளது. அதற்கான ஆவணங்கள் இன்னும் அனுப்பப்படவில்லை. ஏற்கெனவே இதுபோல செயல்பட்டதால்தான் தமிழக அரசு பற்றி உச்ச நீதிமன்றம் கடுமையான கருத்துகளைத் தெரிவித்தது. இனியும் அப்படி நடந்து கொண்டால் மேலும் மோசமான விளைவுகளைச் சந்திக்கநேரிடும் நீதித்துறை மீது எனக்கு நம்பிக்கை உள்ளது.

*காவிரி*

காவிரி நீரைப் பெறுவதில் தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் எடுக்கப்பட்ட முயற்சி, பிரதமர் மன்மோகன் சிங் காட்டிய அக்கறை ஆகியவற்றைப் பாராட்ட வேண்டும். இவ்விடயத்தில் நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை விரைவில் பெற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மக்களவை, மாநிலங்களவையில் உறுப்பினராக அல்லாத ஒருவர் மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்றதில் தவறு இல்லை. விதி மீறல் இல்லை எனும்போது அதில் தவறுகள் கிடையாது.

கட்சியின் மாவட்டச் செயலர்கள் கூட்டம் சென்னையில் கடந்த சனிக்கிழமை நடந்தது. ஜூலை 11, 12ஆம் திகதிகளில் திருநெல்வேலியில் பொதுக்குழுக்கூட்டம் நடக்க உள்ளது. அதில் நிறைவேற்ற வேண்டிய தீர்மானங்கள் குறித்து ஜூலை 10 இல் நடக்கும் மாவட்டச் செயலர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்படும். அதற்கான முன்னேற்பாடாக இன்றைய கூட்டம் நடந்தது.



அண்ணா, பெரியார் பிறந்த தின விழாக்களைக் கொண்டாடும் வகையில் சென்னை தீவுத் திடலில் திறந்தவெளி மாநாடு செப்ரெம்பர் 15 இல் நடத்தப்படும். பிற கட்சிகளின் தலைவர்களை அந்த மாநாட்டிற்கு அழைப்பது பற்றிப் பின்னர் முடிவு

# நடிகர் விஜயகாந்த் விவகாரம்

# பேச்சுவார்த்தைக்குத் தயார்


திரைப்பட நடிகர் விஜயகாந்துடன் உள்ள மோதல் காரணமாகத் திரைப்படத் தொழில் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகயாருடன் வேண்டுமானாலும் பேசுவதற்கு பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் ஆயத்தமாக இருக்கிறார் எனக் கட்சியின் பொதுச் செயலர் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறார்.

பாட்டாளி மக்கள் கட்சியோ, ராமதாஸோ திரைப்படத்துறைக்கும் அத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் எதிரிகள் அல்ல.

திரைப்படம் சிறந்த தோர் ஊடகம் என்பதையும் அது இலட்சக் கணக்கானவர்களுக்கு வாழ்வளித்து வருகிறது என்பதையும் பா.ம.க. உணர்ந்துள்ளது. அதே நேரம் இளைஞர்களைச் சீரழிக்கும் கருவியாகச் சினிமா மாறக்கூடாது என்பதிலும் உறுதியாக இருக்கிறது.

சினிமாவை ரசிக்கலாம் ஆனால். பூஜிக்க வேண்டுமா என்றுதான் ராமதாஸ் இளைஞர்களைக் கேட்கிறார்.யாரோ ஒருவர் கூறியது அவரது தனிப்பட்ட கருத்து என்று அவருக்காக திரைப்படத் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் பரிந்து பேசுகின்றனர். இவரின் தனிப்பட்ட கருத்துக்கள் பா.ம.க. தொண்டர்களின் மனதைப் புண்படுத்துவதை அவர்கள் ஏன் கண்டிக்கவில்லை? தமிழ்த் திரைப்படத் தொழில் நசிந்துவிடக் கூடாது என்பதில் அதிக அக்கறையுள்ளவர் ராமதாஸ் .

தனிப்பட்ட சிலரது கருத்துக்களால் திரைப்படத் தொழில் பாதிக்கக் கூடாது என்பதற்காக யாரோடும் வெளிப்படையாகப் பேசுவதற்கு டாக்டர் ராமதாஸ் ஆயத்தமாக இருக்கிறார். என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (து)



அஸாம் மாநிலத்தின் காம்ருப் மாவட்டத்தில் பெய்த கன மழையினால் அம் மாவட்டத்தின் பெரும் பகுதி வெள்ள நீரால் சூழப்பட்டுள்ளது. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங் களை நோக்கி இடம் பெயர்ந்து வருகின்றனர். வாழையின் தண்டுப் பகுதியை படகாக்கி அதில் பாதுகாப்பான இடம் நோக்கி செல்லும் குமரகோன் கிராமத்தைச் சேர்ந்த குடும்பத்தினர்.

## இந்தியச் செய்திகள்

### மான்தோலுடன் ஓடிய குட்டிச்சாமியார் மக்கள் முன் தோன்றினார்

நான் ஒரு ஆன்மீகச் செடி, நான் வளரக் கூடாது என்பதற்காகச் சிலர் சதி செய்கிறார்கள் என்று சில காலம் தலைமறைவாக விருந்து சமீபத்தில் வெளியான குட்டிச்சாமியார் தெரிவித்திருக்கிறார்.

மான்தோல் விவகாரத்தில் என்னைச் சிக்க சைக்கச் சதி நடக்கிறது. "மான் தோலுடன் ஓடிய குட்டிச்சாமியார்" என என்னை வைத்துப் பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றன.

பக்தர் ஒருவர் என்னிடம் மான்தோலைக் கொடுத்து அதில் அமருமாறு கேட்டுக் கொண்டார். அவர் விரும்புகிறாரே என்பதற்காக நானும் அதில் அமர்ந்தேன். பின் அந்தப் பக்தர் மான்தோலை எடுத்துச் சென்றுவிட்டார்.

இதை ஒரு விவகாரமாக்கி எனது பெயரைக் கெடுக்க முயற்சி நடக்கிறது. இது தொடர்பாக வனத் துறையினர் விசாரணை நடத்தினால் அதற்கு முழு ஒத்துழைப்பும் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறேன்.

தலைமறைவின் பின் மக்கள் முன் தோற்றிய குட்டிச்சாமியார் இவ்வாறு கூறினார். (து)

# பா.ம.க. அலுவலகம் எரிப்பு எம்.எல்.ஏ. உட்பட 500பேர் கைது

(கடலூர்)


கடலூர் அருகே குறிஞ்சிப்பாடியில் பா.ம.க.அலுவலகம் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

நடிகர் விஜயகாந்த் அண்மையில் கள்ளக் குறுச்சியில் நடைபெற்ற விழாவொன்றில் மக்களைச் சந்திக்காமலே சிலர் மந்திரி ஆகிறார்கள் என ராமதாஸின் மகன் அன்புமணியைக் குறிவைத்துப் பேசியிருந்தார்.

இதனால் கொதிப்படைந்த பா.ம.க. தொண்டர்களுக்கும் விஜயகாந்த் ரசிகர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன.

இந் நிலையிலே தான் பா.ம.க. அலுவலகம் தீவைத்துக் கொளுத்தப்பட்டது.

தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் உட்பட 500 பேர் கைது செய்யப்பட்டனர். (து)



இந்தியாவில் வட மாநிலங்களில் தற்போது பருவமழை துவங்கியுள்ளது. உத்திரப்பிரதேச மாநிலத்தின் மதுராநகர் அருகே உள்ள வனப்பகுதி ஒன்றில், வானில் மேகங்கள் சூழ்ந்துள்ளதைக் கண்டு தோகை விரித்தாடும் காட்சி.

# இந்திய செயற்கைக் கோளில் இஸ்ரேலின் அதிநவீன கமரா

இந்தியாவில் தயாரிக்கப்பட்டு விரைவில் விண்ணில் செலுத்தப் படவிருக்கும் ஜிசாட் - 4 செயற்கைக் கோளில் இஸ்ரேலின் அதிநவீன கமராடெளவெக்ஸ் பொருத்தப் படவுள்ளது.

இந்தக் கமராவைத் தயாரித்து செயற்கைக் கோளில் பொருத்தும் பணி தொடர்பாக தனியார் நிறுவனம் ஒன்றுடன் இஸ்ரேல் அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.

அறிவியல், தொழில் நுட்பம் மற்றும் விவசாயத் துறைகளில் இணைந்து பணியாற்றுவது தொடர்பான ஒப்பந்தத்தில் இந்தியாவும் இஸ்ரேலும் ஏற்கெனவே கையெழுத்திட்டுள்ளன. அறிவியல் ஆய்வுக்காக ஜிசாட் - 4 செயற்கைக் கோளில் பொருத்தி விண்ணில் செலுத்தப்படும் இந்தக் கமரா எடுத்து அனுப்பப்படும் படங்கள் அறிவியல் ஆய்வுக்காகப் பயன்படுத்தப்படும்.

வானியல் ஆய்வு தொடர்பாக கூட்டாக ஆராய்ச்சி மேற்கொள்வது பற்றிய ஒப்பந்தம் இந்தியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே 2003 டிசம்பரில் கையெழுத்தானது. ஜிசாட் - 4 செயற்கைக் கோளில் பொருத்தப்படும் இந்தக் கமரா எடுத்து அனுப்பும் படங்கள் இரு நாடுகளிலும் உள்ள கல்வி நிறுவனங்களில் கூட்டாக ஆராய்ச்சி நடத்த வழிவகுக்கும். (து)

## யூரோக்கிண்ணம்–2004

# அரையிறுதி ஆட்டத்தில் நுழைந்த மூன்றாவது அணி நெதர்லாந்து

மிகப் பரபரப்பாக நடைபெற்று வரும் யூரோக்கிண்ணக் கால் இறுதியாட்டத்தின் மூன்றாவது போட்டியில் சுவீடனின் கனவைச் சிதறடித்து அரையிறுதியாட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மூன்





றாவது அணியாக நெதர்லாந்து இடம்பிடித்துள்ளது.

வழங்கப்பட்ட நேரத்தில் எதுவித கோல்களும் போடாத இரு அணிகளும். மேலதிக நேரத்திலும் கோல் போடத் தவறின் இரண்டு அணிகளுமே தமது நடுநிலைகளைப் பலப்படுத்தி விளையாடின வீரர்கள் முன்நிலைக்குச் செல்லப் பெரிதும் தயக்கம் காட்டின.

ஆயினும் டச்சு அணியின் நட்சத்திரமான றொபின் மிக அற்புதமாக ஆடினார். மஞ்செஸ்டர் யுனைட்டட் கழகத்திலிருந்து அவர் செல்ஷியாவுக்குப் போனபோது, அவரைப் பற்றி அலட்டிக்கொள்ளாது யுனைட்டட் கழகம், நேற்று முன்தினம் அவர் விளையாடிய விதத்தை மெச்சியது.


பெனால்டி உதைமூலம் போட்டி முடிவு நிர்ணயிக்கப்பட்ட போது 5-4எனும் கோல் கணக்கில் டச்சு அணி வெற்றிபெற்றது. (யே)

## செற்றியை வெற்றிகொண்ட ரோஸி!

# பட்டியலில் முதலிடம் பிடித்தார்

மோட்டார் சைக்கிள் பந்தயங்களின் நடப்புச் சம்பியனான வலன்ரீனோ ரோஸி நேற்று முன்தினம் இடம்பெற்ற டச்சு கிராண்ட் பிறிக்ஸ் மோட்டார் சைக்கிள் போட்டியொன்றில்





தனது கடும் போட்டியாளாரான செற்றி கிபர்னோவைத் தோற்கடித்து 126புள்ளிகளுடன் உலகச் சம்பியன் பட்டியிலில் முதலிடத்திற்குத் தாவினார்.

ஸ்பானியா செற்றியைப் பிடிப்பதற்கு 6புள்ளிகள் தேவையான நிலையில் இந்த வெற்றி அவரை முதல்நிலைக்குக் கொண்டு வந்தது. செற்றியும் 126புள்ளிகள் பெற்றிருந்த போதும் இது வரை நடைபெற்ற போட்டிகளில் இரண்டில் செற்றியும் நான்கில் ரோஸியும் வென்றதால். வலன்ரீனோ ரோஸிக்கு முதலிடம் கிடைத்திருக்கிறது.

இவ்வருட இறுதியில் தீர்மானிக்கப்படும் உலகச்சம்பியன் பட்டம் இம் முறையும் ரோஸிக்குக்கிடைக்குமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். இப் போட்டியின் இறுதிவரை செற்றி கிபர்னோவைத் தொடர்ந்து வந்த ரோஸி இறுதிச் சுற்றிலேயே அவரைத் தாண்டி முன்னுக்கு வந்தார். அவ்வேளை கட்டுப்பாட்டைச் சற்று இழந்த அவரது யமாஹா மோட்டார் சைக்கிள் கிபர்னோவின் ஹொன்டாவில் சற்று முட்டியது. இது சர்வதேச தரத்திற்குரியதல்ல என்று ஒப்புக் கொண்ட ரோஸி, இது ஒரு பரபரப்பான வெற்றி என்றும் செற்றி மிக அற்புதமாக போட்டியிட்டதாகவும் கூறினார். (யே)



கலிபோர்னியாவில் நடைபெறும் ஒலிம்பிக் ஜிம்நாஸ்ரிக் தெரிவுப் போட்டிகளில் அமெரிக்க வீராங்கனை ஹோலி வைஸ் சாகசம் புரிவதைப் படத்தில் காணலாம்.

## விம்பிள்டன் 2004

# மூன்றாவது தடவையாகவும் விம்பிள்டன் ஞாயிறு போட்டி

விம்பிள்டன் வரலாற்றில் கடும் மழை காரணமாக ஓய்வு நாளான ஞாயிறு தினத்தில் இம்முறையும் போட்டிகள் நடைபெற்றன.




நேற்று காலை 11மணி தொடக்கம் மத்திய பிரிவு மைதானப் பகுதியில் சுமார் 11,000 ரிக்கற்றுக்கள் விற்பனைக்கு விடப்பட்டன. செரீனா வில்லியம்ஸ், ரிம் ஹென்மன், றொஜர் பெடரர் உள்ளிட்ட பல முன்னணி வீர வீராங்கனைகளின் போட்டிகள் இடம்பெற்றன.

1991,1997ஆகிய ஆண்டுகளிலும் இத்ற்கு முன்னர் கடும் மழை காரணமாகப் போட்டிகள் ஞாயிற்றுக் கிழமைகளில் நடாத்தப்பட்டது.

விம்பிள்டனின் ஓல் இங்கிலாந்துக் கிளப்பின் தலைமை அதிகாரி கிறிஸ் கொரிங் இதுபற்றிய தெரிவிக்கையில் இது மிகவும் கவலைக்குரியது ஆயினும் எல்லோருடனும் கலந்து ஆலோசித்த பின்னரே இம் முடிவு எடுக்கப்பட்டதாக அறிவித்தார். (யே)

# கடும் மழை காரணமாக கிரிக்கெற் போட்டி நிறுத்தம்


எக்பஸ்ரனில் மேற்கிந்திய அணிக்கும் நியூசிலாந்து அணிக்குமிடையில் நடைபெற்று வந்த நஸ்றவெற் தொடரின் முதல் போட்டி கடும் மழை காரணமாக நிறுத்தப்பட்டு இரு அணிகளுக்கும் தலா மூன்று புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளது.



ஆட்டம் நிறுத்தப்பட்டபோது மேற்கிந்திய அணியினர் 122 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெற்றை இழந்திருந்தனர். பிறையன்லாரா 22பந்துகளில் 36ஓட்டங்களை எடுத்திருந்தார். இதில் ஜேக்கப் ஓரம் வீசிய ஒரு ஓவரில் மட்டும் அவர் 23ஓட்டங்களைப் பெற்றார்.

கடும் மழை காரணமாக 35 ஓவருக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டி இரண்டாவது தடவையும் கடுமையான மழை பெய்ததால் 21ஓவராகக் குறைக்கப்பட்டது. நியூஸிலாந்து அணி துடுப்பெடுத்தாட்டத் தொடங்கிய பொழுது 97ஓட்டங்களை எடுத்தனர். அவ்வேளை இரண்டு விக்கெற்றுக்களை அவர்கள் இழந்திருந்தனர் மீண்டும் மழை கடுமையாகப் பெய்தமையால் ஆட்டம் நிறுத்தப்பட்டு இரு அணிகளுக்கும் தலா மூன்று புள்ளிகள் வழங்கப்பட்டன. (யே)

## விளையாட்டுச் செய்திகள்





**ஒலிம்பிக்கிற்கு இன்னும் 46 தினங்கள்**

## ஒலிம்பிக் வரலாறு 15

# 1964ல் டோக்கியோ நகரில் இடம்பெற்ற 15வது ஒலிம்பிக்

1964ல் முதற்தடவையாக ஆசிய நாடொன்றில் ஒலிம்பிக் போட்டிகள் நடாத்தப்பட்டன. மூன்று பில்லியன் டொலர்களைச் செலவுசெய்து ஜப்பான் இப் போட்டிகளைச் நடாத்தியது. மரத்தினாலான ஓடுபாதைகள் டோக்கியோ விலேயே இறுதியாகப்பாவிக்கப்பட்டன.



நிறவெறிகாரணமாகத் தென்னாபிரிக்காவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. வடகொரியாவும், இந்தோனேஷியாவும் தடைசெய்யப்பட்டன. 14நாடுகள் புதிதாக இணைந்தன. மொத்தமாகத் 93நாடுகள் பங்குபற்றிய பெரும் போட்டியாக இது அமைந்தது.

கரபந்தும், ஜூடோவும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டன. டச்சுக்காரரான அன்ரோணியால் முதலாவது ஜூடோதங்கப்பதக்கத்தை வென்றார். மரதன் போட்டியில் இம்முறையும் எத்தியோப்பியர் அபிபி பிக்கில்லா காலில் பாதணியணிந்து வெற்றிபெற்றார். போட்டிக்கு 6கிழமைகளுக்கு முன்னர்தான் அவர் கல்லடைப்புக்குச் சத்திரசிகிச்சை செய்திருந்தார்.

பிரிட்டனின் மேரி ராண்ட் 800மீற்றரில் முதலாது தங்கம் வென்றார். அமெரிக்க நீச்சல் வீரர் டொன் ஸ்கோலண்டா நான்கு தங்கம் வென்றார்.

மூன்று தடவை (1956,60,64) ஒலிம்பிக்கில் வெற்றிபெற்ற சோவியத் ஜிம் நாஸ்டிக் வீராங்கனை லறிஸ்சா இம்முறையும் 2 தங்கம் வென்று ஓய்வுபெற்றார். (யே)

தொழுதகையுள்ளும் படையொடுக்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து - குறள்

வலம்புரி

## கருணாவின் விவகாரம் அம்பலமாகும் இரகசியங்கள்

சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடரும் ஆர்வத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு மெல்ல மெல்ல விலகி வருகிறது. சமாதான முயற்சிகளை உடனடியாகத் தொடருமாறு நோர்வேக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி தனது சமாதானப் பயணத்தை இடை நிறுத்தியுள்ளதுபோல் தெரிகின்றது.

பாராளுமன்றத்தில் தனது கட்சியின் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க முடியாமல் தத்தளிக்கும் ஜனாதிபதிக்கு இப்போது சமாதானம் என்பது மறந்துபோன விடயமாயிற்று.

அரசின் சமாதான முயற்சிகள் இப்போது வெறும் பூச்சாண்டி வித்தை என்பதை நாட்டு மக்களும் சர்வதேசமும் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

சமாதான முயற்சி எனக் கூறிக்கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் காலம் கடத்துவதே ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பவற்றின் நோக்கமாகும். யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்திவிட்டு, சமாதானம் எனக் கூறிக் கொண்டு காலத்தை நீடிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைக்க முடியும் என்பது சிங்களப் பேரினவாதக் கட்சிகளின் எண்ணமாகும்.

அதேவேளை சமாதான காலத்தில் காலத்தை நீடித்து விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைப்பது என்ற சிந்தனையுடன் விடுதலைப் புலிகளுக்குள் சிக்கலை ஏற்படுத்தி அந்த அமைப்பை பலவீனப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் வல்லமையை நசுக்க முடியுமென்பதும் அரசின் கருத்தாக இருக்கின்றது. இதனை வெளிப்படுத்துவதாகவே கருணாவின் விவகாரம் அமைந்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆறு சுற்றுப் பேச்சுக்களை விடுதலைப் புலிகளுடன் நடத்தியிருந்த போதிலும் எந்தத் தீர்வையும் வழங்கும் எண்ணப்பாடு அந்தக் கட்சியிடம் இருக்கவில்லை. மாறாக வடக்குக் கிழக்கைப் பிரித்துவிடும் முயற்சிகளிலேயே அக்கட்சி தீவிரமாக ஈடுபட்டிருந்தது. வடக்கையும் கிழக்கையும் இணைப்பதற்கு கருணா பயன்படுத்தப்பட்டார்.

பிரதேசவாதத்தை முன்வைப்பதன் மூலமே வடக்கு-கிழக்கைப் பிரித்தாளமுடியும் என்ற நோக்கில் ஐக்கிய தேசிய முன்னணி செயற்பட்டது. இதற்கு முஸ்லிம் கட்சிகளும் உதவி செய்தன. வடக்குக் கிழக்கைப் பிரிப்பதன் மூலம் முஸ்லிம்களுக்கே நன்மையென அக் கட்சிகள் கருதிக் கொண்டன. அவர்கள் தம் நலன் கருதித் தீட்டிய சதிவலையில் கருணாவும் அகப்பட்டுக் கொண்டார். கருணாவைத் முதன்மைப்படுத்தி நடத்திய நாடகம் இப்போது அம்பலமாகத் தொடங்கியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்காவிற்கும் கருணாவிற்கும் தொடர்பிருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பேச்சாளர் மங்களசமர வீர தெரிவித்துள்ளார்.

இதேபோல் அரசிற்கும் கருணாவுக்குமிடையில் தொடர்புகள் இருக்கும் விடயமும் அம்பலமாகியுள்ளது. ஒட்டு மொத்தத்தில் விடுதலைப் புலிகளின் பலத்தை நசுக்க வேண்டுமெனக் காத்திருந்த அனைத்து அமைப்புகளும் ஏதோஒரு வகையில் கருணாவுடன் தொடர்பைக் கொண்டிருப்பது அம்பலமாகியுள்ள இரகசியங்கள் எதுவாயினும் கருணாவுடன் ஆளும்வர்க்கம் தொடர்பைக் கொண்டிருப்பதென்பது சமாதான முன்னெடுப்புக்களுக்கு உகந்தவையாக இருக்க முடியாதென்பதே அரசியல் ஆய்வாளர்களின் முடிந்த முடிபாகும்.

சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் பலத்தை உடைப்பதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள் தமிழ் மக்களின்பலம் விடுதலைப் புலிகள் என்பதால் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதே ஒரே வழியென்பது அவர்களின் தீர்மானம்.

இதனைச் செய்வதற்காக மேற் கொள்ளப்பட்ட சதி முயற்சி விடுதலைப் புலிகளின் நுண்ணறிவு வளர்ந்த அணுகுமுறை காரணமாக அம்பலமாகியுள்ளதுடன் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்காக எந்த சக்தியையும் அவர்கள் பயன்படுத்த முற்பட்டால் அதனாலேயே அவர்கள் தாங்களைத் தாங்கள் தாக்கிக் கொள்கிறார்கள்.

# இரட்டை வேடம் போடும் இராணுவத்தை இனியும் நம்பிக் கொண்டிரோம்

## கௌசல்யன் திட்டவட்டமாக அறிவிப்பு

ஒரு புறம் கருணாவைத் தடவிக் கொடுத்துக் கொண்டு மறுபுறம் புலிகளை ஆசுவாசப்படுத்தும் படைத்தரப்பின் முயற்சிகளை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறான ஒரு நிலையில் படையினருடன் தொடர்ந்து சந்திப்புகள் நடத்திக் கொண்டிருப்பது அர்த்தமற்றது.

இவ்விடயத்தில் எமது தலைமைப்பீடம் எடுக்கும் முடிவுக்குப் பின்னரே படைத்தரப்புடனான சந்திப்பு பற்றிக் கூறமுடியும் என்று புலிகளின் மட்டு. - அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இராணுவத்தரப்பு கருணாவை தனது அரவணைப்பில் வைத்துக் கொண்டு, அரசு கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கொலைகளை நடத்திக் கொண்டு, புலிகளுடன் நல்ல உறவைப் பேணவிரும்புவது பிழையான விடயம்.

அரசு கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து படைத்தரப்பினர் மீது எமக்கு நியாயமான சந்தேகம் உள்ளது. படைத்தரப்பினருடனான சந்திப்புகளின் போது, இதனை அவர்களுக்கு நாம் எடுத்துக்கூறியுள்ளோம். அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் பணிபுரியும் எமது போராளிகளினதும் பொது மக்களினதும் பாதுகாப்புக்கும் இராணுவமே பொறுப்பேற்க வேண்டும்.

போர் நிறுத்த உடன்படிக்கையிலும் இது மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எமது பகுதியை நாங்களும் படையினர் பகுதியை படையினரும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்று படைத்தரப்புடனான சந்திப்புகளில் தெளிவுபடுத்தியுள்ளோம்.

ஆனால், தெளிவுபடுத்திய விடயங்களை அவர்கள் ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை. ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியாது. இது தொடர்பாக நல்லதொரு முடிவை எமது தலைமைப் பீடம் எடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.



தலைமைப்பீடத்தின் முடிவிற்குப் பின்னர் தான் படைத்தரப்புடனான சந்திப்புப் பற்றிக் கூறமுடியும். இராணுவத் துடன் எவ்வித பிரச்சினைகளும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே அவர்களுடன் தொடர்ச்சியான சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றோம். அப்படியிருந்தபோதும் நடேசன், தம்பையா போன்ற தமிழ் மக்களுக் காகவும் அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் பொருளாதார அபிவிருத்திக்காகவும் தமது பங்களிப்பைச் செலுத்தி வந்தவர் களை நாம் இழந்துவிட்டோம். தமிழ் மக்களின் வளர்ச்சியில் அக் கறை கொண்டு மக்கள் மத்தியிலிறங்கி வேலை செய்த இவர்களின் கொலைகளுக்கு இராணுவமே பொறுப்பேற்க வேண்டும் என்று கூறி யுள்ளார்.

# பாவனைக்கு உதவாத உணவுப்பொருட்களின் இறக்குமதியைத் தடுக்க கடும் நடவடிக்கை

(கொழும்பு)

மனித பாவனைக்கு உதவாத உணவுப்பொருட்களை நாட்டுக்குள் இறக்குமதி செய்வதை தடுக்க சுகாதார அமைச்சு கடும் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது.

மட்டக்குளியில் பெருமளவு காலவதியான உணவுப் பொருட்கள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே, சுகாதார அமைச்சு இத்தகைய கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

முதல் கட்ட நடவடிக்கையாக சுகாதார அமைச்சினால் துறைமுகங்கள், விமானநிலையங்கள், சுங்க அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு கண்காணிப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்ட அவர் அடுத்தகட்ட நடவடிக்கையாக தற்போதைய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைத் திருத்தி, புதிய சட்டமொன்றை அமைக்கும் நடவடிக்கையில் சுகாதார அமைச்சு ஈடுபடுமெனத் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டின் பல பிரதேசங்களிலும் மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்ற தாகவும் இது விடயத்தில் பொது மக்கள் மிக விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறீசேன கேட்டுள்ளார். (உ-60,10)

## நெருப்புக் காய்ச்சல் தாக்கம் யாழ். மாவட்டத்தில் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப்படுபவர்களின் தொகை அதிகரித்து வருவதாக யாழ்ப்பாண மாவட்ட சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வருடத் தொடக்கத்தில் இருந்து கடந்த மே மாதம் வரை 216 பேர் நெருப்புக் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டிருந்தனர்.

யாழ். மாவட்டத்தில் 2003இல் இந் நோயினால் 806 பேர் பீடிக்கப்பட்டனர் எனவும் தெரியவருகின்றது.

பாதுகாப்பற்ற நீர், உணவுகள் காரணமாகவே இந் நோய் பரவுவதாகவும் சுத்தமும்,சுகாதாரமும் நிறைந்த உணவையும் நீரையும் பாவிப்பதன் மூலமே இந் நோயினால் பீடிக்கப்படாமல் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம் எனவும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான பிரதி சுகாதர சேவைகள் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார். (உ-16)

## ௐ தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

துயில் கொள்ளச் செல்லும் முன்பாக அன்று நாம் செய்த நற்செயல்கள், தீய செயல்கள் இவை பற்றிச் சிந்தித்து அவற்றைச் சரி செய்து உறுதி எடுத்துக் கொள்ளல் வேண்டும். தினமும் நாட்குறிப்பு எழுத வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்.

## பௌத்தர்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் சிங்கப்பூர் பிரதமர்

(கொழும்பு)

சிங்கப்பூரிலும் இலங்கையிலும் வாழும் பௌத்த மக்களுக்கு இடையில் புதிய உறவுகளை விருத்தி செய்யப்போவதாக அண் மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சிங்கப்பூர் பிரதமர் போல் சொக் டொங் தெரிவித்துள்ளார். கண்டி தலதா மாளிகையில் நேற்று முன் தினம் பிற்பகல் புனித தந்தத்தை தரிசித்த பின்னர் அவர் இவ்வாறு கூறினார்.



1979ஆம் ஆண்டு தமது நாட்டில் பிரதம மந்திரியாக இருந்த வீக் குவாங் யூவுடன் தான் தலதாமாளிகைக்கு விஜயம் செய் திருந்ததை நினைவுகூர்ந்த அவர் அதன் பின்னர் இலங்கையில் பௌத்த மதம் மென்மேலும் வளர்ச்சியடைந்துள்ள தைக் கண்டு மகிழ்ச்சி வெளியிட்டார்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் அதிசங்கைக்குரிய உடுகம புத்த ரஞ்சித தேரர் சிங்கப்பூர் பிரதமருக்கு ஆசி வழங்கினார். முதலில் தலதா மாளிகைக்கு விஜயம் செய்த சிங்கப்பூர் பிரதமரை ஜெயவர்த்தன நிலமே நிரஞ்சன் விஜயரத்ன வரவேற்பளித்து மாளிகைக்கு அழைத்துச் சென்றார். (உ-121)

## காவல்துறை உறுப்பினர் இராணுவத்தினால் கைது

(தம்பலகாமம்)

திருகோணமலையில் தமிழீழ காவல்துறை உறுப்பினர் ஒருவர் நேற்றைய தினம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் உள்ள மகிந்தபுர எனும் இடத்தில் நிலை கொண்டிருந்த படையினரே இவரைக் கைது செய்துள்ளதாக தெரிய வருகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சிவஞானசுந்தரம் வசீகரன் என்ற காவல்துறை உறுப்பினர் தற்பொழுது சேருவல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (உ-4,64)

## குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த காரைநகரில் விழிப்புக்குழுக்கள்

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக ஒவ்வொரு கிராம அலுவலகர் பிரிவு ரீதியாகவும் விழிப்புக் குழுக்களை அமைக்கும் நடவடிக்கையில் காரைநகர் பொலிஸார் ஈடு பட்டு வருகின்றனர்.

இந்த வகையில் அந்தப்பகுதி கிராம அலுவலகர் தலைமையில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், இளைஞர்களை உள்ளடக்கி கலந்துரையாடல் நடாத்தப்பட்டு விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுவருகின்றன. (உ-246)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இலங்கை அரசு நீக்க வேண்டும்

## தமிழர் மனித உரிமைகள் அமையம் கருத்து

(பிரான்ஸ்)

வடக்குக் கிழக்குப் பகுதிவாழ் மக்கள் கடந்த காலப் போர் நடவடிக்கைகளின்போது பல்வேறு சித்திரவதைகளுக்கும், கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்பட்டதுடன் அவர்களில் பலர் தற்போதும் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டு துன்புறுத்தல்களுக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான சித்திரவதைகள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டுமாயின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் உடனடியாக நீக்க வேண்டுமென பிரான்சைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் தமிழர் மனித உரிமைகள் அமையம் சுட்டிக்காட்டியுள்ளது.

சித்திரவதைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழர் மனித உரிமைகள் அமையம் அண்மையில் அறிக்கை ஒன்றைவெளியிட்டிருந்தது.

அவ்வறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. சுயநிர்ணயப் போராட்டம் மற்றும் ஆயுதப் போராட்டம் நடைபெறும் நாடுகளில் போராடுபவர்களின் சிந்தனைகளையும் குறிக்கோள்களையும் நசுக்கும் வகையிலேயே பெரும்பாலும் எதிர்த் தரப்பினரால் சித்திரவதைகள் மேற்கொள்ளப்படும்.

அந்த வகையிலேயே இலங்கையிலும் வடக்குக் கிழக்குப் பகுதி வாழ் தமிழர்கள் மீது கடந்த 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் அமுல் படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பல்வேறு சித்திரவதைகளும் மேற்கொள்ளப் பட்டுவருகின்றனர்.

சித்திரவதைக்குள்ளானோர் உள்ளிட்ட மேலதிக முக்கிய விடயங்கள் பல ஐககிய நாடுகள சபையின் மனித உரிமை அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான சித்திரவதைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும். சித்திரவதை மேற்கொள்வோரைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கப்பட வேண்டும். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடுகள் வழங்கப்பட வேண்டுமென அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(உ-18)

## சுற்றுச் சூழல் தின விழா

(தனங்கிளப்பு)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் சுற்றுச்சூழல் தின விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இ.கௌதமன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக இரசாயனவியற்துறை தலைவர் திருமதி மீனா செந்தில்நந்தனனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-37)

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் உள்ள மாதர் சங்க மண்டபத்தில் தலைவர் கா.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அனைத்துச் சனசமூக நிலையங்களின் தலைவர் செயலாளர் மற்றும் பொருளாளர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

## கடற்கரும்புலிகள்..

டன் ஈகைவர்ணன்(குகேந்திரன் ரமணன்-நந்தாவில் அம்மன் கோவிலடி கொக்குவில்) ஆகிய கடற்கரும் புலிகளே வீரச்சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது (ச)

## மீண்டும்.

பிரசாரம் செய்யவுள்ளனர்.

அது மட்டு மன்றி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசைக் கவிழ்த்துவிட்டு விரைவில் புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கும் நாம் திட்டமிட்டுள்ளோம்.

இதற்காக எதிரணியில் உள்ள கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.(உ-60,10)

## அரசின்...

துக் கூறுபவர் ஜனாதிபதி. இது உலகறிந்த விடயம். அவர் தமிழரசுக் கட்சியினருக்கு ஒன்றைச் சொல்லிவிட்டு நாட்டு மக்களுக்கு இன்னொன்றைச் சொன்னார்.

ஜனாதிபதியின் ஏமாற்றுத்தனமான போக்கினால் வடக்குக் கிழக்கு மக்கள் விரக்தியடைந்துள்ளனர். இதனால் சமாதான நடைமுறைகள் முற்றிலும் முறிவடைய இடமுண்டு. ஜே.வி.பியினர் எதிர்க் கட்சியில் இருந்தபோது நோர்வேயை வெள்ளைப் புலிகள் என்றனர். இன்று அமைதியாகிவிட்டனர். இன்று அவர்களை நாட்டை விட்டு விரட்டலாமே. புலிகள் பொலிஸ் நிலையங்களை திறந்ததற்கு முன்பு எதிர்ப்புக் காட்டினர் இன்று ஏன் அமைதியாக இருக்கின்றார்கள்.

புலிகள் மன்னாரிலும் பொலிஸ் நிலையம் திறந்துள்ளார்கள். விமான ஓடுபாதை அமைத்துவிட்டதாகக் கூறியுள்ளார்கள். இரு விமானங்கள் உள்ளதாகக் கூறுகின்றார்கள் இந்த தேச பக்தர்கள் எல்லாம் எங்கு சென்றுவிட்டார்கள். அவர்கள் இப்போது ஆட்சியை பிடித்துவிட்டார்கள் அதனால் அமைதியாகி விட்டார்கள் இவ்வாறு ராஜித சேனாரத்தின தெரிவித்தார். (த 6)

## பேரினவாதிகளின்..

ஐக்கிய தேசிய முன்னணி ஜாதிக ஹெலஉறுமயவுடனும் பொது ஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பியுடனும் இணைந்து எந்தப் பெரிய பலம் வாய்ந்த பேரினவாத அரசினை உருவாக்கினாலும் அவற்றால் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றை முன்வைக்க முடியாது.

இன்றைய அரசும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதாக பாசாங்கு செய்து கொண்டு யுத்தத்திற்கான தயார் படுத்தல்களில் ஈடுபட்டுவருகின்றது.

இவ்வாறாக சிங்கள பேரினவாதிகள் தமது ஆட்சியை உறுதி செய்யவும் தமது அரசியல் பலத்தை நிருபிப்பதற்குமே எம்மைப் பயன் படுத்துகின்றனர் என்பதை தமிழர்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

எனவே சிங்கள அரசின் இனவாத வலையில் சிக்கி அவர்களின் ஏமாற்று வித்தைகளுக்கு பணிந்து ஏமாந்து போகும் ஏமாளிகள் நாமல்ல என்றும் ஈழவேந்தன் தெரிவித்தார். (உ-4,64)

## கருணாவுக்கு...

கடந்த மூன்று வருடங்களில் இராணுவத்தினர் மீது இது போன்ற குற்றச்சாட்டுக்களைப் புலிகள் சுமத்தியுள்ளனர். ஆனால் சமாதான முயற்சிகளைக் குழப்பும் வகையில் இராணுவத்தினர் எதனையும் செய்யவில்லையென்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

இதேவேளை கருணாவிவகாரத்தில் இராணுவம் உதவியதாகக் கூறப்படுவது தொடர்பாக உத்தியோகபூர்வமற்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசுக்குத் தெரியாத வகையில் கருணாவுக்கு இராணுவம் உதவியிருக்கலாமென அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமர வீர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது (ச)

## இலங்கை வென்றது

(அவுஸ்ரேலியா)

அவுஸ்ரேலியாவுக்கு கிரிக்கெற் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை அணிக்கும் அவுஸ்ரேலிய அணிக்குமிடையில் நடைபெற்ற நான்கு நாள் போட்டியில் இலங்கை அணி ஐந்து விக்கெற்றுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி அதன் முதல் இனிங்ஸில் 419 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அதன் முதல் இனிங்ஸில் 7 விக்கெட்டுக்களை இழந்து 378 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதில் குமாரசங்கக்கார ஆட்டமிழக்காமல் 203 ஓட்டங்களைப் பெற்றார். இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 145 ஓட்டங்களைப் பெற்றது. 187 ஓட்டங்களை வெற்றி இலக்கா [illegible]

இலங்கை அணி வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.(த)

## கண்காணிப்புக்..

படும் தீர்மானங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையிலும் தமிழ்த்தேசியத்திற்கு எதிரானவர்களுடன் இராணுவத்தினர் தொடர்பு வைத்திருக்கும் நிலையிலும் இராணுவத்தினருடன் பேசுவதில் எவ்வித பிரயோசனமும் இல்லையென்று தீர்மானித்துள்ள விடுதலைப் புலிகள், நேற்று முன்தினம் அக்கரைப்பற்றில் இடம் பெறவிருந்த விசேட அதிரடிப படையினருடனான சந்திப்பை இரத்துச் செய்திருந்தனர்.

இச் சந்திப்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அதிரடிப்படையினர், பொலிஸ் உயர் அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் பிராந்தியத் தளபதிகளும் கலந்து கொள்ளவிருந்தனர்.

இராணுவத்தினருடனான சந்திப்பினை இனிமேல் மேற்கொள்வதில்லையென்று உறுதியான முடிபுடன் இருக்கும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தொடர்பாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன் பியுறு ஹெவ்டே விரிவாக ஆராயவுள்ளார்.

இன்றைய சந்திப்பு இராணுவத்தினருடனான மாதாந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை என்ற முடிபுக்கு நல்லதொரு தீர்வு காணப்படுமென்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹொக்லண்ட் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ம-121)

## அச்சகத் திணைக்களத்தில் தீவிபத்து இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு புலனாய்வுப் பிரிவு அழைப்பு

(கொழும்பு)

அரசாங்க அச்சகத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தீவிபத்துச் சம்பவம் குறித்து ஆராய்வதற்காக அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர்,புலனாய்வுப் பிரிவு அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டுள்ளார் என அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்துடன் அச்சகத் திணைக்களத்தைச் சேர்ந்த 15 பேரிடம் இருந்து பொலிஸார் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளனர். நேற்று முன்தினம் அச்சகத்தின் பொறியியல் களஞ்சியத்தில் ஏற்பட்ட தீ பொலிஸாரினாலும் தீயணைப்புப் படைப் பிரிவினராலும் அணைக்கப்பட்டதனால் கடதாசிகள் களஞ்சியப்படுத்தப்பட்ட இடத்திற்குத் தீ பரவவில்லை. இதனால் மாகாண சபைத் தேர்தலை உரிய திகதியில் நடத்த முடியுமெனவும் அரச அச்சகர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-60,10)

## தீவக மக்களின் பிரச்சினைகளை கஜேந்திரன் எம்.பி கேட்டறிந்தார்

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதி மக்களின் பிரச்சினை குறித்து யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் நேற்று விரிவாக ஆராய்ந்துள்ளார். நேற்றுத் தீவுப் பகுதிக்குச் சென்ற அவர் வேலணையில் வைத்து வேலணை, மண்டதீவு, புங்குடுதீவு மற்றும் மண்கும்பான் பிரதேசங்களின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச் சந்திப்பின் போது தீவுப் பகுதி மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்த அவர் பிரச்சினைகளுக்கான தீர்வை விரைவில் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று விரைவில் மண்டைதீவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராயவுள்ளது.(ச)

## புதிய அரசியல் கட்சியை...

வாதி ஒருவர் உதவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியை தேர்தல் ஆணையாளரிடம் பதிவு செய்யும் பொருட்டு கட்சியின் இறுதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு 35ற்கு மேற்பட்டோர் கொழும்பில் இரகசிய இடம் ஒன்றில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கட்சியின் யாப்பு தயாரித்தல் மற்றும் நிதி விவகாரங்கள் குறித்து முக்கிய புள்ளிகள் பலர் பங்களிப்புச் செய்துவருவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள மாறன் தேர்தல் ஆணையாளருக்கு கையொப்பமிட்ட கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார். கட்சியின் சின்னமாக மீன் தெரிவு செய்யப் பட்டுள்ளது. சிவப்பும் கறுப்பும் இதன் நிறங்களாகும், இலங்கை ஜனநாயக முன்னணி ஏற்கனவே மீன் சின்னத்தைக் கொண்டுள்ளது.

கருணா அரசியல் கட்சியை ஆரம்பிப்பதற்கு ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உதவி வருவதாகவும் தெரிவிக்கபடுகிறது.

இதுபற்றி டக்ளஸ் தேவானந்தா தெரிவிக்கையில், இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் நிகழ்ந்த நிகழ்வுகளைப் போல் கருணாவும் அரசியலில் ஈடுபட விரும்புகிறார். எமது கட்சியின் சில கொள்கைகளைப் பின்பற்றிக் கொண்டு தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடுமாறு நான் கருணாவுக்கு ஆலோசனை கூறியிருக்கிறேன் என்றார்.

இவ்வாறு அந்த ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.(த-6)


## உடன் தேவை

- ✷பாதுகாப்பு ஊழியர்கள்
- ✷பத்திரிகை விநியோகஸ்தர்கள் (சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல் வேண்டும்)
- ✷தேநீர் தயாரிக்கும் சிற்றூழியர்கள்

விருப்பமுடையோர் 29.06.2004 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு நேரில் வரவும்

நிர்வாக உத்தியோகத்தர்

வலம்புரி
15,வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.


## மரணஅறிவித்தல்

### திருமதி செல்வநாயகம் பொன்னம்மா

(வருணன், அச்சுவேலி)

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், வருணன் அச்சுவேலியை வசிப்பிடமாகவும்,புலோலியை தற்காலிக வசிப்பிப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற சரவணமுத்து வள்ளிப்பிள்ளை ஆகியோரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற நாகமணி, கதிராசிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற நாகமணி செல்வநாயகத்தின் அன்பு மனைவியுமான பொன்னம்மா நேற்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் சறோஜினிதேவி(ஓமான்), ஸ்ரீபவான்(கனடா குகன் ஸ்ருடியோ உரிமையாளர்), சாரதாதேவி (கனடா), ஜெயதேவி, சாந்தாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகராசா (ஓமான்), வனிதா(கனடா), வரதராஜா(கனடா) கமலநாதன்(சுவிஸ்,முன்னாள் தலைவர் அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம்),திருச்செல்வம்(பிரதம நூலகர் பருத்தித்துறை பிரதேச சபை, பத்திரிகையாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற லண்டன் சற்குணராஜா, சதாயினிமலர்(கனடா), துஷ்யந்தி(கனடா), பிரசன்னா(கனடா), பவானந்தன்(கனடா), சுதர்சினி(ஜேர்மனி), வினோதினி (கனடா), சுகன்ஜா(கனடா),கிஷோகுமார்(லண்டன்), தர்சன்(கனடா), சுமங்களா, அருணா (பருத்தித்துறை மெ.பெ.உ.பாடசாலை), சிவதேவன்(பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), அபிரா(பருத்தித்துறை மெ.பெ.உ.பாடசாலை),கிரிஷா(பருத்தித்துறை மெ.பெ.உ.பாடசாலை), துவாரகன்(தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயம்) ஆகியோரின் பேர்த்தியும், கர்சினி(கனடா), கிஸ்சன்(கனடா), கோபிகா(ஜேர்மனி), விஸ்ணுவர்தன்(ஜேர்மனி), விதுசியா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு அன்னாரின் இறுதிக் கிரியைகள் நடைபெற்றுப் பூதவுடல் காலை 10மணிக்கு புலோலி ஆனைவிழுந்தான் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருப்பர்வளவு,
புலோலி தெற்கு,
புலோலி.

தகவல்:
ஏ.என்.எஸ்.திருச்செல்வம்
(மருமகன்)

T.P:0212263603
0777143022

[C-275]

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.06.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது